பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 24 சனிக்கிழமை (08-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:102





தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த சந்திப்பின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதற்படத்திலும் பேச்சு நடந்து கொண்டிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# தீர்வு முயற்சிக்குக் கூட்டமைப்பின் ஆலோசனையைப் புலிகள் பெறுவர்

## தமிழ் எம்.பிக்கள் – பாலா நேற்றுச் சந்தித்தபோது முடிவு

கிளிநொச்சி,மார்ச்8

**தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் விவகாரத்தில் தமிழ்க் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 4 கட்சிகளின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு இறுதி, முடிவுகளை விடுதலைப் புலிகள் எடுப்பர்.**

**கிளிநொச்சியில் நேற்று முற்பகல் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் நடந்த சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.**

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவகப் பணியகத்தில் முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பமான கலந்துரையாடல் பிற்பகல் 1.30 வரை இடம் பெற்றது.

விடுதலைப்புலிகளின் சார்பில் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், அடேல் பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்க் கூட்டமைப்பின் தரப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், மாவை.சேனாதிராசா, என்.ரவிராஜ், ஜோசப்.பரராஜசிங்கம், ஆர்.துரைரட்ணசிங்கம், ஞா.கிருஸ்ணபிள்ளை, எஸ்.தங்கவடிவேல், அ.சந்திரநேரு, அ.விநாயகமூர்த்தி, ஜி.ஜி. கஜேந்திரகுமார், செல்வம் அடைக்கலநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம், இராச குகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஸ் அணி) செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரசுத்தரப்புடன் கடந்த ஐந்து சுற்று சமாதானப் பேச்சுக்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் விரிவாக எடுத்துக் கூறினார்.

விடுதலைப் புலிகளும் தமிழ்க் கூட்டமைப்பும் ஓர் அணியில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விடயத்தில் இணைந்து செயற்

(2ஆம் பக்கம் பார்க்க)

# நிரந்தரத்தீர்வு கிட்டும்போது புனரமைப்புக்கு கூடுதல் உதவி!

## ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் தெரிவிப்பு

கிளிநொச்சி,மார்ச்8

இலங்கையில் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படும்போது வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு கூடுதல் உதவிகளை வழங்குவோம் என்று ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் ரடோசினோ தெரிவித்தார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நேற்று தாம் நடத்திய பேச்சுக்களின்போதே அவர் இப்படித் தெரிவித்தார்.

கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் நேற்றுக்காலை 10 மணியளவில் ஹெலியில் வந்திறங்கிய ரடோசினோ தலைமையிலான எண்மர் கொண்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் குழு பின்னர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

வடக்கு - கிழக்குப் புனரமைப்புக்கும் மக்களின் மீள் குடியமர்வுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி தனது கூடுதல் பங்களிப்பை வழங்கவேண்டும் என்று தமிழ்செல்வன் அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

ஏ-9 வீதியை புனரமைக்க நிதி உதவி வழங்கியது போன்று வடக்கு - கிழக்கில் சேதமடைந்துள்ள ஏனைய வீதிகளைப் புனரமைக்க நிதி வழங்

(13 ஆம் பக்கம் பார்க்க)

# 6 புலிகளின் பிணைமனுக்கள் திங்கள் அன்று விசாரணை

## மேன்முறையீட்டு நீதிமன்றில்

கொழும்பு,மார்ச்8

திருகோணமலை, மூதூர் கடற்பகுதியில் கிளைமோர் கண்ணிவெடிகளுடன் கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஆறு விடுதலைப் புலி உறுப்பினர்கள் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட பிணைமனுக்கள் நாளை மறுதினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

கடந்த வருடம் நவம்பர் முதலாம் திகதி மேற்படி நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

திருகோணமலை நீதிவான் முன்னிலையில் தீங்கிழைக்கும் ஆயுதங்கள் வைத்திருந்த சட்டத்தின் கீழ் அறுவரும் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

தீங்கிழைக்கும் ஆயுதங்களை வைத்திருந்த சட்டத்தின் கீழ் விளக்க

(13 ஆம் பக்கம் பார்க்க)

## படையினருக்கு கலைத்துக் கலைத்து கத்திக்குத்து!

சாய்ந்தமருது,மார்ச்8

சித்தசுவாதீனமற்ற நிலையில் அலைந்துகொண்டிருந்த ஒருவர் விசேட அதிரடிப்படையினர் மீது திடீரெனப்பாய்ந்து கத்தியால் பலமுறை குத்தினார். தாக்குதலில் படுகாயமடைந்த ஒரு சிப்பாய் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.15 மணியளவில் கல்முனை நகரிலுள்ள பஸ் நிலையத்திற்கு முன்னால் நடைபெற்றது.

பலமான கத்திக்குத்துக்கு இலக்

(14ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களின் தனித்தரப்பு கோரிக்கை பிரதமர் ஏற்பு!

## கொள்கையளவில் இணக்கமென தகவல்

கொழும்பு,மார்ச்8

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்றுவதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகளும் இக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் எதிர்வரும் காலங்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பேச்சுக்களில் பங்குபற்றும் நிலை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் அதன் தலைவர் அமைச்சர் நூர்தீன் மசூர் தலைமை

(13 ஆம் பக்கம் பார்க்க)

## 10 நாள்களுக்குள் பதில் தருவதாக

# பேர்னாட் அளித்த வாக்குறுதியை களுத்துறை கைதிகள் ஏற்க மறுப்பு

## உண்ணாவிரதத்தை தொடர்கின்றனர்

கொழும்பு,மார்ச்8

தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடப்போவதில்லை என களுத்துறைச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்தனர்.

அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக்க, மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், சட்டமா அதிபரின் திணைக்களப்பிரதிநிதி ஹர்ஷா பெர்னாண்டோ ஆகியோர் நேற்றுக்காலை களுத்துறைச் சிறைக்கு விஜயம் செய்தபோதே கைதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

கைதிகளின் கோரிக்கை தொடர்பாக பிரதமர் உட்பட சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி 10 நாள்களுக்குள் சாதகமான பதில் ஒன்றை தெரிவிப்பதாக கைதிகளுக்கு பேர்னாட் குணதிலக்க உறுதி வழங்கினார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 56 பேர் கடந்த சில தினங்களாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இவர்களில் பலர் இரத்தவாந்தி எடுத்துள்ளனர். பலரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் நிலைவரத்தைப் பொறுத்து

# நாடாளுமன்றக் கலைப்பு; ஜனாதிபதி பரிசீலிப்பார்!

## பொ.ஐ.மு. பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்8

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைப்பாரா? இல்லையா? என்று அவரது நிலைப்பாடு குறித்து நான் கருத்துத் தெரிவிக்க முடியாது ஆனால் நாட்டின் நிலைவரத்தைப் பொறுத்து நாடாளுமன்ற கலைப்பு என்ற விடயத்தை ஜனாதிபதி பரிசீலிப்பார்.

- இவ்வாறு கூறினார் பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம.

நேற்று எதிர்க்கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஜப்பானில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்களுக்கு முன் நாடாளு மன்றத்தைக் கலைக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்று ஊடகங்களில் வெளியான செய்தி பற்றி கேட்டபோதே சரத் அமுனுகம மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ரரோசினோ நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சு நடத்தினார்.
கிளிநொச்சியில் வைத்தியசாலைக் கட்டடத்துக்கான அடிக்கல்லை ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் நாட்டினார். அந்த நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்: தேவா)


ரரோசினோவுக்கு கைலாகு வரவேற்பு.


கிளிநொச்சி அரச அதிபர் மாலையணிவித்தார்.


சந்திப்பின்போது...


வைத்தியசாலைக்கு அடிக்கல் நாட்டுகிறார் ரரோசினோ.

# தமிழக மீனவர் கைது விவகாரம் குறித்து பிரதமர் ரணில் இந்திய தூதுவருடன் பேச்சு!

## இணக்கம் மீறப்பட்டிருப்பதால் இக்கட்டான நிலை

கொழும்பு,மார்ச்8

இலங்கை கடல் எல்லைக்குள் ஊடுருவுவதாகக் கூறப்படும் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் விவகாரம் குறித்து அரசு விரிவாக ஆராய்ந்து வருகிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் நிருபம் சென்னுடன் இது குறித்து பேச்சு நடத்தியிருக்கின்றனர்.

பிரதமரும் அமைச்சர் மொறகொடவும் பாதுகாப்புப் படைகளின் தளபதிகளுடனும் இவ்விவகாரம் குறித்து ஆராய்ந்திருக்கின்றனர்.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது குறித்து தமிழ்நாடு அரசும் இந்திய அரசும் பலத்த ஆட்சேபம் தெரிவித்திருப்பதை தூதுவர் சென் பிரதமர் ரணிலுடனான பேச்சின் போது தெரிவித்தார் என அறியப்படுகிறது.

இதனையடுத்து, இவ்விவகாரம் குறித்து விளக்குவதற்காக அமைச்சர் மொறகொட பிரதமரின் பிரதிநிதியாக அடுத்த சில தினங்களில் தமிழ்நாடு சென்று முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திப்பார் என்று பிரதமர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை கடல் எல்லைக்குள் ஊடுருவும் தமிழக மீனவர்கள் தொடர்பாக இலங்கை - இந்திய அரசுகள் ஏற்கனவே கண்டிருக்கும் இணக்கம், இலங்கை பாதுகாப்புப் படையினரால் சமீப நாள்களில் மீறப்பட்டிருப்பது இலங்கை அரசை பெரும் இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கியிருப்பதாக அரச வட்டாரங்கள் கூறுகின்றன.

இரு நாடுகளுக்குமிடையிலான இணக்கத்தின்படி, இலங்கை கடல் எல்லைக்குள் ஊடுருவும் தமிழக மீனவர்களின் படகுகளை கடற்படையினர் கைப்பற்றலாம். ஆனால், அப்படகுகளில் இருக்கும் மீனவர்களை விடுவித்துவிட்டு படகோட்டிகளை மட்டும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த வேண்டும். படகுகளின் அனுமதிப் பத்திரங்கள் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், இந்த இணக்கத்துக்கு மத்தியிலும் சுமார் 100 படகுகளுடன் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் குறித்து இந்திய அரசு இலங்கை அரசிடம் பலத்த கவலை தெரிவித்திருக்கிறது. (ஐ)

## தீர்வு முயற்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படை வேலையகன் அவசியத்தை அவர் அங்கு வலியுறுத்தினார்.

இக்கலந்துரையாடல் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

★ முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன. முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் தீர்வு அமைய வேண்டும் என்று நாம் தெரிவித்தோம். முஸ்லிம் மக்களை அரவணைத்துச் செல்லவும் அவர்களுக்கு நீதியும் நியாயமும் ஆன தீர்வு கிட்டவும் கூட்டமைப்பும் புலிகளும் இணைந்து செயற்பட இணக்கம் காணப்பட்டது.

★ தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் சமஷ்டி முறையிலான ஆட்சி முறை முஸ்லிம் மக்களின் கோரிக்கைக்கு தீர்வாக அமையும் அதிகாரப் பகிர்வு வடிவம் ஆகியன குறித்து விடுதலைப்புலிகள், கூட்டமைப்புடன் ஆலோசனை நடத்தியே இறுதி முடிவை எடுப்பர். இது விடயத்தில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளும் தமது ஆலோசனைகளை வழங்கும் ஆனால், அக்கட்சிகள் சமாதானப் பேச்சுக்களில் நேரடியாகப் பங்குபற்றமாட்டா.

★ தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண வசதியாக விடுதலைப்புலிகளும் கூட்டமைப்பும் ஒரு பொது வேலைத்திட்டத்தில் ஓர் அணியில் செயற்படவும், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான செயற்பாடுகளை இணைந்து முன்னெடுக்கவும் இணங்கின.

★ உயர் பாதுகாப்பு வலயம், மக்களின் இயல்பு வாழ்க்கை உட்பட மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் ஒன்றுபட்டு உழைக்க முடிவு செய்யப்பட்டது.

★ சிறைச்சாலைகளில் 700 கைதிகள் இருந்தனர். அவர்களில் சுமார் 600 பேர் விடுதலை ஆகினர். மீதியான 100 பேரையும் விடுவிக்க சர்வதேச மன்னிப்புச்சபை மூலம் நடவடிக்கைகளை கூட்டமைப்பும் விடுதலைப் புலிகள் இயக்கமும் இணைந்து மேற்கொளளும் அடுத்து சில தினங்களில் இலங்கை வரும் கண்காணிப்புச் சபையின் செயலாளர் நாயகத்துடன் பேசி கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படி சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி நெருங்கிய உறவினர் ஒருவரின் திருமணத்தில் கலந்துகொள்வதற்காக இந்தியா சென்றுள்ளார் என்றும் -

அவர் நாடு திரும்பியதும் பிறிதொரு தினத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சந்திப்பார் என்றும் இரா.சம்பந்தன் தெரிவித்தார். (ஒ-3-9-12)

## இராமேஸ்வரம் மீனவர்களின் போராட்டம் வாபஸ்

ராமேஸ்வரம்,மார்ச்8

இராமேஸ்வரத்தில் நேற்று நடைபெறவிருந்த தமிழக மீனவர்களின் மறியல் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

இராமேஸ்வரம் மண்டபத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்று இலங்கையில் கைதான மீனவர்களையும் விசைப்படகுகளையும் விடுவிக்கச் செய்யக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த புதன்று முதல் கால வரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். மேலும், நேற்று ராமேஸ்வரம் பஸ் நிலையத்தில் மறியல் நடத்துவதாகவும் அறிவிப்பு விடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து கலெக்டர் விஜயகுமார் தலைமையில் சமரசப் பேச்சு நடைபெற்றது. அதன்படி விடுவிக்கப்பட்டவர்கள் போக மீதம் உள்ள மீனவர்களையும், விசைப்படகுகளையும் இரண்டு தினங்களில் விடுவிக்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமென உறுதி தெரிவிக்கப்பட்டது. இதனால் மீனவர்களின் பஸ் மறியல் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது. (ஐ)

## பெண்கள் குழு யாழ்.வந்தது

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ்குடாநாட்டில் இன்று இடம்பெறவுள்ள சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக மூவினங்களையும் சேர்ந்த சுமார் 250 பெண்கள் நேற்று இங்கு வந்தனர்.

இமாடா நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி நிமால்கா பெர்னாண்டோ தலைமையில் வருகை தந்துள்ள இக் குழுவினர் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இன்று நடைபெறவுள்ள மகளிர் தின விழாவில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி செல்வி வசந்தி அரசரட்ணம் கலந்துகொள்ளவுள்ளார்.

இதேவேளை - யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மகளிர் குழுவின் ஏற்பாட்டிலான மகளிர் தினக் கூட்டம் இன்று காலை 10மணிக்கு மகளிர் குழுவின் தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலைவர் திருமதி எஸ்.விக்னராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-10)

## அக்குரஸ்ஸ பி. சபை தேர்தல் இன்று

கொழும்பு,மார்ச்8

கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல்களின் போது ஒத்திவைக்கப்பட்ட அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெறுகின்றது. பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி, சிங்கள மகா சம்மத பூமிபுத்திர முதலான கட்சிகள் போட்டியிடுகின்றன.

42 வாக்களிப்பு நிலையங்களில், 56 ஆயிரத்து 128 பேர் வாக்களிக்கவுள்ளனர். காலை 7 மணிமுதல் பிற்பகல் நான்கு மணி வரை வாக்களிப்பு நடைபெறும். (ஐ)

# பெண்கள் பிரதிநிதிகளின் ஒன்றுகூடல் நேற்று நடந்தது

யாழ்ப்பாணம்,மார்ச்8,

யாழ்மாவட்டத்தின அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்த பெண்கள் பிரதிநிதிகள் ஒன்றுகூடல் நேற்று வெள்ளிக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி தலைமையில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட பெண்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகளைக் கண்டறிவதற்கான இவ்வொன்றுகூடலில் காத்திரமான பல முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் -

குறிப்பாக பெண்களின் உரிமைகளையும் கௌரவத்தையும் உறுதிப்படுத்துவதற்கும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கும் அவர்களின் நலன்களையும் பாதுகாப்பையும் சட்டரீதியாக உறுதிப்படுத்தும் அமைப்பு ஒன்றை தோற்றுவிப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அதிகாரமுள்ள பல்வேறு தரப்பட்ட பிற அமைப்புகளின் அங்கீகாரத்தை இந்த அமைப்புக்கு பெறுவதற்கான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவ்வமைப்பானது எதிர்காலத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளில் இருந்து பாதுகாப்பு அளித்து அவர்களது வாழ்க்கையை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கைக் குழுவாகச் செயற்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)


யாழ். மாவட்ட பெண்கள் பிரதிநிதிகளின் ஒன்றுகூடலின் ஆரம்பநிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம்.

# களனி பல்கலைக்கழகம் நேற்று முதல் மூடப்பட்டது

கொழும்பு,மார்ச்8

களனி பல்கலைக்கழகம் மறு அறிவித்தல்வரை நேற்று நண்பகல் முதல் மூடப்பட்டது. மருத்துவபீடம் தவிர்ந்த ஏனைய சகல பீடங்களினதும் மாணவர்கள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இப்பல்கலைக் கழகத்தின் விடுதிகளைப்பயன்படுத்துவதில் மாணவரிடையே எழுந்த பிரச்சினைகளே பல்கலைக்கழகம் மூடப்பட்டதற்கான காரணம் எனத்தெரியவருகிறது.

இரண்டாம், மூன்றாம் ஆண்டு மாணவிகளுக்கு பல்கலைக் கழகத்துக்கு வெளியே தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்ற போதிலும் அவர்கள் முதலாம் ஆண்டு மாணவிகளின் விடுதிகளையே பயன்படுத்தி வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

இதனால் எழுந்த பிரச்சினைகளை அடுத்தே பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கிறது.

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி விதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

ASIAN
COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1எ, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

# சச்சினின் அடியால் கலங்கினேன் என்கிறார் சொஹைப் அக்தார்



"இந்தியாவுக்கு எதிரான உலகக்கிண்ணப் போட்டியில் டென்டுல்கரின் அதிரடியால் கதிகலங்கிப் போனேன்."

- இவ்வாறு 'ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ்' என்றழைக்கப்படும் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சொஹைப் அக்தார் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'த கார்டியன்' என்ற பத்திரிகையில் வெளியான கட்டுரையில் அக்தார் இவ்வாறு எழுதியுள்ளார்.

"உலகக் கிண்ணப் போட்டியில் எங்கு தவறு நிகழ்ந்தது என்பதே தெரியவில்லை.

"இந்தியாவுக்கு எதிராக 10 ஓவர்களில் 72 ஓட்டங்கள் விளாசப்பட்டன. எனது முதல் ஓவரில் 18 ஓட்டங்கள் எடுத்தவுடனேயே எனது தன்னம்பிக்கை தகர்ந்தது. அடுத்த ஓவர் பந்துவீச வக்கார் என்னை அழைக்கவில்லை.

"டென்டுல்கர் அபாரமாக ஆடினார். அதனால் 300 ஓட்டங்கள் எடுத்திருந்தாலும் நாங்கள் எதுவும் செய்திருக்கமுடியாது என்றே தோன்றுகின்றது.

"சச்சினின் விக்கெட்டை இறுதியில் கைப்பற்றினாலும் அன்றைய ஆட்டம் பீதியளிக்கக்கூடியதாக இருந்தது."- இவ்வாறு சொஹைப் அக்தார் தெரிவித்துள்ளார்.




# ஸிம்பாப்வே அணிக்கு இன்றும் அதிர்ஷ்டம் கைகொடுக்குமா?

கேப்டவுன், மார்ச்8

கிரிக்கெட் உலகக்கிண்ண தொடரின் இரண்டாம் பாகம் நேற்று ஆரம்பம். அடுத்த முக்கிய ஆட்டம் இன்று தென்னாபிரிக்காவிலுள்ள புளும்பொன்ரேய்ன் மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஸிம்பாப்வே - நியூஸிலாந்து அணிகள் மோதுகின்றன.

'சுப்பர் சிக்ஸ'க்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 6அணிகள் போனஸ் புள்ளிகள் அடிப்படையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவை இந்த இரு அணிகளுமே.

இவ்விரு அணிகளும் ஒப்பீட்டளவில் சமபலம் கொண்டவையாகக் காணப்படுகின்ற போதும் இன்றைய ஆட்டம் இரு அணிகளுக்கும் பிரதானமானது.


நீண்டகால இடைவெளிக்குப் பின் சந்தித்துக்கொள்ளும் இவ்வணியில் யார் சாதிக்கப்போகின்றார்கள்? அண்மைக் காலமாக நடைபெற்று வந்த ஆட்டங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, நியூஸிலாந்தே சாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்காக ஸிம்பாப்வேயினரின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிடமுடியாது. தாம் பங்கு பற்றிய 'ஏ' பிரிவில் மிகவும் பலம் வாய்ந்த அணிகளுடன் விளையாடி தோல்வியுற்றாலும், அத் தோல்வியின் மூலம் நல்லதொரு பட்டறிவைப் பெற்று 'சுப்பர் சிக்ஸ'க்கு வந்துள்ளார்கள் அவர்கள். நியூஸிலாந்திற்கு பெரும் சவாலாக அமைவார்கள் என்பதில் ஐயமில்லை.

நியூஸிலாந்தைப் பொறுத்தவரை உலகக் கிண்ணத் தொடரில் இலங்கையுடனான முதல் ஆட்டத்தில் தட்டுத்தடுமாறி தோல்வி அடைந்தது. வரட்டுக் கௌரவம் காரணமாக கென்யாவுக்குச் செல்லாது அநியாயமாக 4 புள்ளிகளை கென்ய அணிக்கு தாரைவார்த்துக் கொடுத்து கென்யாவை 'சுப்பர் சிக்ஸ'க்குள் நுழைவதற்கு இடம்விட்டுக் கொடுத்தது.

இருந்தபோதும் இலங்கையுடனான தோல்வியை சரியான பாடமாகவும், கென்யாவுடனான விட்டுக் கொடுப்பை பெரும் சவாலாகவும் ஏற்று மறுபிறவி எடுத்தவர்கள் போன்று எழுச்சிபெற்றனர். இந்தத் திடீர் எழுச்சியினால் இந்த உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் அணிகளாகக் கருதப்பட்ட தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவு அணிகளை தோல்வியடையச் செய்தனர். அதன்பின் பங்களாதேஷ், கனடா, ஆகிய அணி

(10ஆம் பக்கம் பார்க்க)

# தரக்குறைவான விமர்சனத்திற்காக கங்குலியிடம் ஸ்ரீகாந்த் வருத்தம்



தரக்குறைவாக விமர்சனம் செய்வதற்காக இந்திய அணித்தலைவர் கங்குலியிடம் ஸ்ரீகாந்த் வருத்தம் தெரிவித்தார். இருப்பினும் இந்திய வீரர்கள் - வர்ணனையாளர்கள் இடையே பனிப்போர் நீடித்து வருகிறது.

கிரிக்கெட் உலகக்கிண்ணப் போட்டியில் 'லீக்' ஆட்டத்தில் இந்திய அணி ஆஸ்திரேலியாவிடம் 9 விக்கெட் வித்தியாசத்தில் மோசமான தோல்வியைத் தழுவியது.

இந்திய அணியின் இந்த மோசமான தோல்வி இந்தியா முழுவதும் ஆவேச அலையை ஏற்படுத்தியது. கொதிப்படைந்த ரசிகர்கள் தங்கள் கதாநாயக வீரர்கள் உருவப்படத்தை கொளுத்தியும், இந்திய அணிக்கு பாடை காட்டியும் வீரர்களின் வீடுகள் மீது கல் வீசியும் தங்கள் ஆத்திரத்தை வெளிப்படுத்தினார்கள்.

இதனை சற்றும் எதிர்பாராத இந்திய அணி வீரர்கள் தொலைக்காட்சி வர்ணனையாளர்களின் மோசமான விமர்சனமே ரசிகர்கள் தாக்குதலில் ஈடுபட தூண்டியது என்று குற்றம் சாட்டினார்கள்.

குறிப்பாக, இந்திய அணியின் முன்னாள் அதிரடி ஆட்டக்காரர் ஸ்ரீகாந்தின தரக்குறைவான விமர்சனமும் முன்னாள் வீரர் நவஜோத்சிங்கின் வழக்கமான குத்தலான வாய்ஜால வார்த்தைகளும் ஒளிபரப்பானவை இந்திய அணி வீரர்களுக்கு மனப் பகையை ஏற்படுத்தியுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# விநோதமான சூழ்நிலையில் பயிற்றுநர்கள்

உலகக் கிண்ண ஆட்டங்களில் சில நேரங்களில் சில விநோதமான சூழ்நிலைகள் உருவாகுவதுண்டு.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியாவும் கென்யாவும் மோதின.

1983இல் உலகக்கிண்ணத்தை, வென்ற இந்திய அணியில் இடம் பெற்றிருந்த சந்தீப் பட்டீல்தான் கென்யாவில் பயிற்சியாளராக உள்ளார்.

செஞ்சூரியனில் 14ஆம் திகதி இந்தியாவும், நியூஸிலாந்தும் விளையாடவுள்ளன. இந்திய அணிக்கு நியூஸிலாந்தின் முன்னாள் வீரர் ஜோன் ரைட் பயிற்றுநராக இருக்கிறார்.

இலங்கையும், ஆஸ்திரேலியாவும செஞ்சூரியனில் நேற்று மோதின. இலங்கை அணிக்கு ஆஸ்திரேலியாவின் டேவ் வட்மோர் பயிற்றுநராக இருக்கிறார்.

ஸிம்பாப்வே அணிக்கு ஆஸ்திரேலியாவின் ஜெஃவ் மார்ஷ் பயிற்சியாளராக இருக்கிறார்.

இதுபோன்ற சூழ்நிலையில் பயிற்றுநரின் மனநிலை எப்படி இருக்கும் சந்தீப் பட்டீல் கூறுவதைக்கேளுங்கள்.

"நாங்கள் தொழிலில் நேர்மையுடன் இருக்க விரும்புபவர்கள் மன நிலை எப்படி இருக்கும் என்ற கேள்வியே எழவில்லை. கென்யா சிறப்பாக ஆடவேண்டும், வெல்லவேண்டும் என்பதே தற்போதைய குறிக்கோள்" - என்றார்.

நியூஸிலாந்தில் இந்தியா சுற்றுப் பயணம் செய்தபோது படுதோல்வியைத் தழுவியது இந்தியா.

ஜோன் ரைட் எவ்வளவோ முயன்றும் இந்திய அணியால் சமாளிக்க முடியவில்லை. நியூஸிலாந்து அணிக்கு பயிற்சியாளராக போகிறார் ஜோன் ரைட் என்ற வதந்தி வேறு அப்போது உலவியது.

1996இல் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இலங்கை உலகக்கிண்ணத்தை கைப்பற்றிய போதும் டேவ் வட்மோர்தான் இலங்கை அணியின் பயிற்சியாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

SHARP Action of the day



இலங்கையுடனான நேற்றைய ஆட்டத்தில் கில்கிறிஸ்டின் விளாசல்

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் Browns
BROWNS ELECTORINICS

# உலகக்கிண்ணத்தை இந்தியா வெல்லும்!

## தென்னாபிரிக்க அணியின் முன்னாள் பயிற்றுநர் கூறுகிறார்

இந்திய அணி உலகக்கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு அதிகம் உள்ளது. - இவ்வாறு தென்னாபிரிக்க அணியின் முன்னாள் பயிற்றுநர் பொப்வூல்மர் கூறியுள்ளார்.

"உலகக்கிண்ணத்தை வெல்லும் ஆற்றலை இந்தியா அணி கொண்டுள்ளது. இங்கிலாந்தில் நடைபெற்ற போட்டிகளின் போதும் நான் இந்தியாவுக்கு ஆதரவு அளித்தேன்; இப்போதும் ஆதரவு அளிக்கிறேன். அவர்கள் உலகக்கிண்ணத்துக்கான பிரதான போட்டியாளர்கள்.

"இந்தியா மிகவும் பலமான துடுப்பாட்ட வரிசையைக் கொண்டுள்ளது. ஆனால், அண்மைக்காலமாக அவர்களது வேகப் பந்துவீச்சும் என்னை வியப்பில் ஆழ்த்துகிறது" - இவ்வாறு வூல்மர் கூறினார்.

இந்திய அணியின் பயிற்றுநராக பதவியேற்பார் என்ற தகவல்களை வூல்மர் மறுத்தார்.

"மேற்கிந்திய தீவுகள் மாத்திரமே

(10ஆம் பக்கம் பார்க்க)

# பாகிஸ்தான் அணியில் பிரிட்டிஷ் இளைஞர்கள்

பிரிட்டனில் வசிக்கும் பாகிஸ்தான் இளைஞர்களை பாக் கிரிக்கெட் அணியில் சேர்ப்பதன்மூலம் அணியை மீளக் கட்டியெழுப்பலாம்.

- இவ்வாறு பாகிஸ்தான் அணியின் முகாமையாளர் சஹூரியர்கான் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண போட்டிகளில் பாகிஸ்தானின் தோல்விகளுக்கு மனோதிடமின்மையும், அழுத்தமான சூழ்நிலைகளுக்கு முகம்கொடுப்பதற்கான ஆற்றலின்மையுமே காரணம் என சஹூரியர்கான் நம்புகிறார்.

பாகிஸ்தானில் உள்ளவர்களை விட பிரிட்டனில் வசிக்கும் பாக். இளைஞர்கள் நல்லொழுக்கத்தையும் மனோதிடத்தையும் கொண்டவர்கள் எனவும் சஹூரியர்கான் நம்புகிறார்.

இவர் பிரிட்டனுக்கான பாக. தூதுவராக பணியாற்றியபோது மன்செஸ்டர், பிரேட்போர் முதலான பகுதிகளில் உள்ள இளைஞர்களை பயிற்சிக்காக பாகிஸ்தானுக்கு அனுப்புவதற்கு திட்டமிட்டார்.

எனினும் அனுசரணையாளர்களின் பற்றாக்குறையினால் இத்திட்டம் வெற்றி அளிக்கவில்லை.

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel
IBM
hp
Mercury
PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி விதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns

# VACANCIES
## At
# JAFFNA COLLEGE

Applications are invited for the following posts from qualified and experienced teachers in the respective fields as per requirements stipulated below -

**1. PRIMARY TRAINED TEACHERS**

Should possess Teacher Trained Certificate in Primary Education of a recognised Teacher Training College and with minimum 5 years teaching experience in the primary section.

**2. TEACHERS FOR INFORMATION TECHNOLOGY**

Minimum requirement will be a two year Diploma in Information Technology from a recognised University. The ideal candidate will be a person with ability to handle classes from Grade 1 - 13 in the English medium.

**3. A GRADUATE TEACHER FOR TAMIL**

A graduate from a recognised University with Tamil as a subject, a special degree in Tamil will be an added qualification. Should be able to handle classes from Grade 6 upwards.

For all above posts the applicants should be under 45 years of age. Those who possess the necessary qualifications and experience can apply with copies of certificates. Short listed applicants will be called for an interview.

The persons selected for the above posts can look forward to a salary well on par with the remuneration levels of other schools.

Closing date for application is **21st March, 2003.** Please apply to ***The Principal, Jaffna College, Vaddukoddai.*** The envelope containing your application should have the post applied written on the top left corner.

**Jaffna College,**
**Vaddukoddai.**
**6th March, 2003.** (C/26812) **PRINCIPAL.**

# 25வருட காலமாக திருத்தப்படாத வீதி

மூளாய் பிரதான வீதியிலிருந்து வேரம் நோக்கிச்செல்லும் வீதி கடந்த 25வருடங்களுக்கு மேலாக திருத்தப் படவில்லை. இதனால் பாரிய குண்டும குழியுமாகக் காணப்படும் இந்த வீதி யால் தற்போது போக்குவரத்துச் செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இது குறித்து பல தடவைகள் சம்பந் தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தி யும் பயனேதும் கிட்டவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (எ-14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உரும்பிராய் கிழக்கு, செல்லப்பா சனசமூக நிலையத்தின் போசகராகவும் உரும்பிராய் கிழக்கு, காட்டு வைரவர் தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினராகவும் இருந்து சமூகப் பணி யாற்றிவரும் உரும்பிராய் கிழக்கு கிராம சேவையாளர்

**திரு.செ.விக்னேஸ்வரன்**

அவர்கள் கிராம சேவையாளர் தரம் Iஇற்குப் பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் நீடுழி காலம் வாழ்ந்து சமூகப் பணிசெய்ய ஆண்டவன் திருவருளை இறைஞ்சு கின்றோம்.

உரும்பிராய் கிழக்கு. (C/26833) செல்லப்பா சனசமூக நிலைய சமூகம்.




**யாழ்.ஈழநல்லூர்**
**சட்டநாதர் திருக்கோயில் சிவன் மகோற்சவம் 2003**

09.03.2003 ஞாயிறு காலை 11 மணிக்கு
கொடியேற்றம்
17.03.2003 திங்கள் காலை 9 மணி
தேர் உற்சவம்
18.03.2003 செவ்வாய் காலை 10 மணி
பங்குனி உத்தர தீர்த்த உற்சவம்

பிரதம குரு
பிரம்மஸ்ரீ தாணு.வாசுதேவக் குருக்கள் *(சபரிசதாசன்)*
ஆலய குரு
பிரம்மஸ்ரீ வா.ஜெயவஸ்தாங்க சர்மா - பரிபாலனசபை.
(15311)

# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்




**உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்**

**'அருணன்ஸ்' தரும் பரிசு - 01**

அரை இறுதி ஆட்டங்களுக்குத் தெரிவாகும் நான்கு அணிகளும் எவை?

1)................................ 3)................................
2)................................ 4)................................

முழுப்பெயர் : ....................................
முகவரி : ....................................
அ. அட்டை எண்: ....................................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளைமறுதினம் திங்கட்கிழமை (10.03.2003) நண்பகல் 12மணிக்குள் 'அருணன்ஸ்' தரும் பரிசு - 1, உதயன் பணிமனை, 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தின் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

**உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்**

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(................................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(................................)

**உதயன்** 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவுத் திகதி மார்ச் 15

முழுப்பெயர் : ....................................
முகவரி : ....................................
அ.அட்டை எண்: ....................................

**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருணன்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**

இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

உதயன்

# பெண்ணுரிமை பேணுவோம்

இன்று சர்வதேச மகளிர் தினம்.

மானுடத்தின் மாதாவினரை மதிப்பதற்காகப் பிரகடனப்படுத்தப்பட்ட தினம்.

மனுக்குலத்தின் வாழ்வுக்கு அடிநாதமாக விளங்கும் மங்கையரின் உரிமைகளை உறுதி செய்து அவர்கள் சமத்துவத்துடனும், சம அந்தஸ்துடனும், வாழ வழிசெய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கும் நாள்.

சமூகத்தின் அரைவாசிப் பங்கினர் பெண்கள். ஆனால், சர்வதேச ரீதியிலும் சரி, சமூகத்தின் சிறு அலகான குடும்பத்திலும் சரி அவர்கள் சம உரிமையோடு நடத்தப்படுவதில்லை. ஆண்களோடு சம அந்தஸ்தில் மதிக்கப்படுவதில்லை. நிலைதாழ்ந்தவர்களாகவே கருதப்படுகின்றார்கள்.

வாழ்வியலில் அடிமைப்பட்டவர்களாக - ஒதுக்கப்பட்டவர்களாக - கருதப்பட்ட பெண்களுக்கு சம உரிமை, சுதந்திரம் வழங்கப்படவேண்டும் என்ற விழிப்புணர்ச்சி இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே முகிழ்ந்துவிட்டது.

பெண்களுக்கு சம உரிமை வேண்டி, நியூயோர்க் நகர நெசவுப் பெண்கள் 1857 மார்ச் 8ஆம் திகதி தொழிற்சங்கப் போராட்டத்தில் குதித்தனர்.

1910ஆம் ஆண்டு டென்மார்க் தலைநகர் கொப்பன்ஹேகனில் நடைபெற்ற அனைத்துலக சம உடைமை பெண்கள் மாநாட்டில், நியூயோர்க் நகர நெசவுப் பெண்களின் உரிமைப் போர் நினைவு கூரப்பட்டது. அந்த நாளை அனைத்துலக மகளிர் தினமாகக் கொண்டாடும் முடிவு கொப்பன்ஹேகன் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் 1911ஆம் ஆண்டு தொடக்கம் அமைதி, சமத்துவம், ஜனநாயகம் என்பவற்றுக்காகப் போராடுவதற்கு பெண்களை அணி திரட்டும் எழுச்சி நாளாக மார்ச் 8ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது.

பெண்களின் உரிமை தொடர்பாக ஓரளவு விழிப்புணர்வு ஏற்பட்டு வருகின்றது என்பது உண்மைதான். ஆனால், அவர்கள் ஆணுக்கு நிகரானவர்கள் - சமமானவர்கள் - என்று மதிக்கப்படும் நிலை இன்னும் முழுமைபெறவில்லை; எட்டப்படவில்லை. அது வெகு தொலைவில் இருப்பதாகவே தென்படுகின்றது.

'முறத்தால் புலியை விரட்டிய' புறநானூற்றுக் காலப் பெண்களைப் பற்றி ஒரு புறம் பிரலாபித்து, பழம் கதை பேசிக்கொண்டு, மறுபுறம் பெண்களைப் போகப் பொருள்களாகவும் அடிமைகளாகவும் கருதி நடத்திக் கொண்டிருந்தோம்.

ஆனால், இன்று புறநானூற்றுக் கால வீரத்தை மிஞ்சும் வகையில் விஞ்சும் உறுதியோடு - களத்தில் கனல் கற்கும் - மெய் வீராங்கனைகளை நிஜத்தில் கண்டு வியக்கும் நிலையில் நாம் இருக்கின்றோம்.

என்றாலும், இன்னும்கூட நமது சமூகம் திருந்திவிடவில்லை. பெண்களுக்கு எதிரான பாலியல் பலாத்காரமும், சமூகத்தைப் புற்றுநோயெனப் பற்றி நிற்கும் சீதன அரக்கனும் அதற்கு தெளிவான சாட்சிகள்.

பெண்ணுரிமை மேலை நாடுகளில் ஓரளவு பேணப்பட்டாலும் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் நடைமுறையில் அது மோசமாகவே உள்ளது.

ஆனாலும்கூட, இலங்கைத் தமிழர்களின் விடுதலைப் போராட்டமும் அதன் வழிகாட்டலும் பெண்களுக்குச் சம உரிமை வழங்குவதில் - பெற்றுக் கொடுப்பதில் - புதிய, பிரகாசமான பாதையைத் திறந்துவிட்டிருப்பது ஓரளவு மனநிறைவைத் தரக் கூடியது.

இலங்கையைப் பொறுத்தவரை இதுவிடயத்தில் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகையில் வடக்கு - கிழக்கில் நிலைமை மேம்பாடாக இருந்தாலும் பெண்ணுரிமை மதிக்கப்படும் நிலை சமூகத்தின் அடிமட்டம் வரை இன்னும் முழுமையாக ஊன்றவில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

பெண்ணுரிமை நிலைநிறுத்தப்படுவதற்கு பெண்கள் மத்தியில் மாத்திரம் எழுச்சி, விழிப்புணர்ச்சி ஏற்பட்டுப் பயனில்லை. ஒட்டுமொத்தமாக முழு சமூகத்திலும அந்த சிந்தனைப்போக்கு ஊன்றி, பெரு விருட்சமாக வளரவேண்டும்.

"எல்லோருக்கும் சுதந்திரம், எல்லோருக்கும் உரிமைகள், சொல்லிலும் செயலிலும் அனைவரும் சமம்" என்ற புதிய உலகப் போக்கு - சிந்தனை - உலகம் முழுவதும் வலுப்பெற்று, காலூன்றும் போது பெண்ணுரிமை நிலைநிறுத்தப்படுவது உறுதியாகும்.

# குருநகர் தொடர்மாடிக் கட்டட வீடுகளின் உறுதிகள் வழங்கப்படும்

குருநகர் தொடர்மாடிக் கட்டடத்தில் உள்ள வீடுகளின் ஆரம்பக் குடியிருப்பாளர்களுக்கு அதற்கான உறுதிகள் வழங்கப்படவுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் க.மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

கட்டடத்தில் உள்ள வீடுகள் யாவும் ஆரம்பத்தில் யாருக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டதோ அவர்களுக்கே உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

ஆரம்பக் குடியிருப்பாளர்கள் அனைவரையும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துடனோ அல்லது வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்துடனோ தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொடர் மாடியில் 160 வீடுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - மேற்படி தொடர் மாடியில் உள்ள வீடுகளில் அநேகமானவை கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்களின்போது பலத்த சேதமடைந்தமையும், வீடுகள் சேதமடைந்தமை மற்றும் குடியிருக்க அனுமதி வழங்கப்பட்டமை போன்ற காரணங்களினால் இந்த வீடுகளின் குடியிருப்பாளர்கள் வேறு இடங்களில் வசித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.(ம-10)

# திருவீதி மான்மியம்

வந்த பேருந்து மோத
வாயினால் இரத்தம் பாய
அந்த பேருந்து அவ்விடத்தை விட்டு
அதிரடியாய் மறைந்து போக
சந்தியில் நின்றோர் கூடி
சரிவர நீர் தெளிக்க
பிந்தி வந்த ஓட்டோ ஒன்றில்
பிசகின்றி விரைந்து ஏற்ற
வந்த பேர் இயமனாரோ
வழியினில் உயிர் பறிக்க
அந்தகன் கொண்டு சென்ற
ஆளின் பேர் அறிந்தாரில்லை.

- விகடகவி.

## மிருசுவில் படுகொலை வழக்கு விசாரணை:

# விறகு வெட்டத் தாம் கொண்டு சென்ற கத்திகளை அடையாளம் காட்டினார் சாட்சி!

கொழும்பு,மார்ச்8

மிருசுவில் படுகொலைகள் சம்பந்தமான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றபோது, சாட்சியமளித்த முக்கிய சாட்சியான பொன்னுத்துரை மகேஸ்வரன் தானும், தன்னோடு விறகு வெட்டுவதற்காக வந்த சகாக்களும் கொண்டுசென்ற கத்திகளை நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்.

காலஞ்சென்ற ஞானசேகரன் கொண்டு சென்ற கத்தியை அடையாளம் காட்டிய மகேஸ்வரன், மற்றொரு கத்தியை அரச தரப்பு சிரேஷ்ட சட்டவாதி சரத் ஜயமான காட்டி "நீர் கொண்டு சென்ற கத்தி இதுவா" என்று கேட்டபோது "இது போன்ற ஒரு கத்தியைத்தான் கொண்டு சென்றேன். ஆனால், இது எனது கத்தி இல்லை. இது என்னோடு வந்த சகாக்களில் ஒருவர் கொண்டு வந்த கத்தியாக இருக்கலாம் என்பது எனக்குத் தெரியாது" - என்று கூறினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணையின்போது எதிர்த்தரப்பு சட்டத்தரணி அனில் சில்வா சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

*கேள்வி:-* யாழ்ப்பாணத்திலிருந்து மிருசுவில் வந்து, அங்கு எத்தனை வருடங்களாக வசிக்கின்றீர்?

*பதில்:-* 30 வருடங்களாக வசிக்கிறேன்.

*கேள்வி:-* கரவெட்டிக்கு இடம்பெயர்ந்து மீண்டும் மிருசுவில் வந்தது எந்த ஆண்டு?

*பதில்:-* 2000ஆம் ஆண்டு.

*கேள்வி:-* 2000ஆம் ஆண்டு முற்பகுதியிலா? பிற்பகுதியிலா?

*பதில்:-* நடுப்பகுதியில்.

*கேள்வி:-* ஆனையிறவில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் ஒன்று இருப்பது தெரியுமா? வடபகுதியிலிருந்த பல இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது உமக்குத் தெரியுமா?

*பதில்:-* அவற்றின் மீது பல தாக்குதல்கள் நடைபெற்றது தெரியும்.

*கேள்வி:-* ஆனையிறவு இராணுவ முகாம் முற்றாக அழிக்கப்பட்டு பலர் உயிரிழந்தது பற்றி உமக்குத் தெரியுமா?

*பதில்:-* இராணுவ முகாம் அழிக்கப்பட்டது தெரியும். ஆனால், உயிரிழப்புகள் பற்றித் தெரியாது.

*கேள்வி:-* வெற்றிலைக்கேணி என்ற பெயரில் ஒரு முகாம் இருந்தது தெரியுமா?

*பதில்:-* கேள்விப்பட்டிருக்கின்றேன்.

*கேள்வி:-* அந்த முகாம் இப்போது இல்லை அல்லவா?

*பதில்:-* ஆம்.

*கேள்வி:-* இயக்கச்சி என்றொரு இடம் இருந்தது உமக்குத் தெரியுமா?

*பதில்:-* தெரியாது.

*கேள்வி:-* ஆனையிறவு முகாம் தாக்கப்பட்டபின் முகமாலை என்ற இடத்திற்கு இராணுவம் இடம்பெயர்ந்தது உமக்குத் தெரியுமா?

*பதில்:-* தெரியாது.

*கேள்வி:-* முகமாலை முகாமிலிருந்து மிருசுவில் கிராமத்திற்கு ஷெல் அடி ஆரம்பமாகியது பற்றி உமக்குத் தெரியுமா?

*பதில்:-* மிருசுவில் கிராமத்திற்குள் ஷெல் வீழ்ந்தது தெரியும்.

*கேள்வி:-* மிருசுவில் கிராமத்தில் ஷெல் விழத்தொடங்கிய காரணத்தால்தான், மிருசுவில் கிராமத்திலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தார்கள். சரிதானே?

*பதில்:-* ஆம்.

விசாரணை நேற்று வெள்ளிக்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டது. (எ)

## விவசாயிகளுக்கு பெரு நஷ்டம்

# உற்பத்தி செய்யப்பட்ட நெல்லுக்கு உத்தரவாத விலையை நிர்ணயம் செய்க!

## அரச அதிபரிடம் மானிப்பாய் சம்மேளனம் கோரிக்கை

சண்டிலிப்பாய்,மார்ச்8

யாழ்.மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் நெல் விற்பனையில் தற்போது பலத்த நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். எனவே, நெல்லுக்கு உத்தரவாத விலைத்திட்டத்தை அமுல்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்குக.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. இது குறித்து சம்மேளனம் கடந்த வாரம் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இம்முறை பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு எதிர்பார்த்தளவுக்கு விளைச்சல் கிடைக்கவில்லை.

நெல் அறுவடை செய்யும் பெண் தொழிலாளர்களுக்கு நூறு ரூபாமுதல் 125 ரூபாவரை நாளொன்றுக்கு வேதனம் வழங்கப்படுகின்றது. சூடுமிதிப்பதற்கு தொழிலாளர்கள் 200 ரூபாமுதல் 250 ரூபாவரை கூலி பெறுகின்றார்கள்.

அதேவேளை - உழவு இயந்திரம்மூலம் நெல் அடி கூலியாக ஒரு படங்கிற்கு 175 ரூபாமுதல் 200 ரூபாவரை பெறுகின்றனர். இவ்வாறு நெல் விதைத்த காலம் தொடக்கம் நெல் அறுவடை செய்யும் காலம் வரை பாரிய செலவுகள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த உற்பத்திச் செலவுக்கும், தற்போது நெல் விற்கப்படும் விலைக்கும் பாரிய இடைவெளி காணப்படுகின்றது.

மக்களின் உணவுக்கு முக்கிய பொருளான நெல்லை உற்பத்தி செய்யும் விவசாயிகள் இவ்வாறு நஷ்டம் அடைவது என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

ஆகவே, ஏ.ரி-402 இன நெல் உட்பட நாலு மாத காலத்தில் விளைச்சலைத் தரும் நெல் இனங்களின் உத்தரவாத விலை 70 கிலோ நிறையுள்ள ஒரு மூடைக்கு 900 ரூபாவாகவும், பெரிய வெள்ளை, மொட்டைக் கறுப்பன், எச்-4 ஆகிய நெல் இனங்களுக்கான உத்தரவாத விலை 70கிலோ நிறையுள்ள ஒரு மூடைக்கு ஆயிரத்து நூறு ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்து அறிவிக்குமாறு வேண்டுகின்றோம்.

இந்த விலையில் நெல்லை விற்பனை செய்வதன்மூலம் தான் விவசாயிகள் நஷ்டத்திலிருந்து ஓரளவு மீட்சி பெற முடியும்.

இதேவேளை -

வன்னிப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல்லுக்கும் விவசாயிகளின் நலன்கருதி அங்கு உத்தரவாத விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

- என்று மேற்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதி யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (எ-135)

### நாளை

மாசி 25
ஞாயிற்றுக்கிழமை
(09.03.2003)
திதி : ஷஷ்டி
முன் இரவு 7.21 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
பின் இரவு 1.50 வரை.
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 9.24 - 11.14
ராகுகாலம்: 4.54 - 6.24
(பஞ்சாங்க நேரப்படி)

### உதய வாக்கு

ஆசையின் வார்த்தைகள் எப்போதும் மதுரமாகவே இருக்கும். கனத்த மழை நீண்டு பெய்யாது.

### நல்வாழ்வளிப்பாய்!

திருவண்ணை நகர் உறைகின்ற சங்கரா சிவனே
எழில் தையலுமை இடமிருத்திய பெம்மானே தலைவா
தில்லையிலே களிநடம் புரிந்தெம்மை ஆட்கொள்ளும் கூத்தா
சிரமேல் மதிசூடிக் கங்கைதனை வைத்த வைத்தீஸ்வரா
சிதம்பரத்தில் அருளமுதளிக்கும் நடேஸ்வரா
அடியவர், நாயன்மார், சிறார்கள் யாவரும்
திங்களும் கோலாகலமாய் வீதிவரும் உன் காட்சி காண
நாடி வந்து போற்றி நின்றோம் நல்வாழ்வளிப்பாய் ஐயா!

-நயினை விஜயன்.

(வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய ஒன்பதாம் திருவிழா இன்று)

## பருத்தித்துறை வடமராட்சி விளையாட்டுச் சங்கம்

நடத்தும்

## யாழ்.மாவட்ட

# மாபெரும் கபடி, மல்யுத்த போட்டி

இப்போட்டியில் பங்கு ற விரும்பும் கழகங்கள், வீரர்கள் போட்டிக்குரிய விண்ணப்பப்படிவத்தை கீழ்க் குறிப்பிட்ட விலாசத்தில் பூர்த்திசெய்து இதற்குரிய கட்டணத்துடன் 20.03.2003 திகதிக்கு முன்பு ஒப்படைக்கவும்.

கட்டண விவர: கபடி (குழுவுக்கு) 300/=
மல்யுத்த வீரர் 100/=
(ஒருவருக்கு)

*விண்ணப்பப்படிவம் பெற்று ஒப்படைக்க வேண்டிய முகவரி:*

**ஈஸ்வரி நகை அகம்**

பிரதான வீதி, பருத்தித்துறை. (C/26831)

## மதியுரைஞர் குழுவின் அமர்வு சென்னையில்!

யாழ்ப்பாணம்,மார்ச்8

உலகத்தமிழ் பண்பாட்டு இயககத தின் உலகளாவிய கல்விப்பிரிவின் மேனிலைத் தமிழ்க்கல்வி மையத் தின் மதியுரைஞர் குழுவின் அமர்வு இன்று சனிக்கிழமை சென்னையில் நடைபெறவுள்ளது.

சென்னை பல்கலைக்கழக துணை வேந்தர், தமிழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொற்கோ ஆகியோர் கலந்துகொள்ளவுள்ள னர்.

இந்த அமர்வில் பங்கேற்பதற்காக இயக்கத்தின் உறுப்பினர்களில் ஒரு வரான யாழ்.பல்கலைக்கழகத்தின் தமிழ்துறைத்தலைவரும், முதுபெரும தமிழ்ப் பேராசிரியருமான பேராசிரி யர் அ.சண்முகதாஸ் இன்று சென்னை பயணமாகிறார்.

(எ)

## கிறிஸ்தவ ஊழிய பயிலகம்

*இடம் :* **சீயோன் தேவாலயம்**
24, இராமையா செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

*காலம் :* 17.03.2003 முதல் 21.03.2003 வரை .

*நேரம் :* காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை.

*விரிவுரையாளர்கள் :* **வண. பரி சில்வர்பக்**
**வண. எல்வ் ஷடாய்**
**சகோதரன் : டேவிட் ஷடாய்**
*(சர்வதேச கிறிஸ்டியன் றிவைவல் குருசேட்)*

*குறிப்பு :*
- ★ 5 நாள்களும் பங்குபற்றுபவர்களுக்கு சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும்.
- ★ கிறிஸ்தவ சபைகளில் ஊழியத்தில் ஈடுபடுவோர் பங்குகொள்ளலாம்.
- ★ 200 பேர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.
- ★ தனிப்பட்ட அழைப்பு கொடுக்கப்படமாட்டாது.

*பதிவுக்கட்டணம் :* **ரூபா 75**

**(பதிவு செய்தோர் இக்கட்டணத்தை 17 ஆம் திகதி காலை சீயோன் தேவாலயத்தில் செலுத்தலாம்.)**

*பதிவு செய்யும் கடைசி திகதி:* **14.03.2003**

*உங்கள் பெயர்களை நேரடியாகவோ கடித மூலமாகவோ கீழ்க்காணும் முகவரியில் பதிவு செய்யலாம்.*

*போதகர், சீயோன் தேவாலயம்*
*29, ஆசீர்வாதம் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (15117)

தகவல்:
போதகர் *J.K.*பிலிப்
(சீயோன் தேவாலயம்).

## மார்ச் 8

### *சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு*

நிதர்சனத்தின் சிறப்பு வெளியீடாக
நிதர்சன மகளிர் பிரிவு வழங்கும்

### இ.குயிலினியின்

# "உப்பில் உறைந்த உதிரங்கள்"

**வீடியோப் படம்**

**கடற்புலிகளின் வீரத்தையும் ஈகத்தையும்**
**உங்கள்முன் கொண்டுவரும் புதிய ஒளிக்காவியம்**

*ஒளிப்பதிவு* – நிமலா, அகல்விழி
*படத்தொகுப்பு* – வெண்ணிலா.
*இசை* – இசைத்தென்றல்
*தயாரிப்பு* – நிதர்சனம் மகளிர் பிரிவு
கதை, திரைக்கதை, இயக்கம் – இ.குயிலினி

இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ்.பல்கலைக்கழகம்
நேரம்: பிற்பகல் 4.00 மணி (புதிய நேரம்) (15268)

ஒரே நேரத்தில் தமிழீழத்தின் எல்லாத் திரையரங்குகளிலும் வெளிவருகிறது.

*அனுசரணை:* **அருச்சுனா புகைப்பட கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 09 - 03 - 1940

விண்ணில் 06 - 02 - 2003



## திருமதி வாமதேவன் சோதிமலர்

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு உடன்வந்து எமக்கு அனைத்து உதவிகளையும் செய்து, இறுதிச் சடங்கில் கலந்து எமது துயரத்தில் பங்குபற்றிய உற்றார், உறவினர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (08.03.2003) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (15179)

பிரிவால் துயருறும்:
தாயார், சகோதரர்கள்.

# PRINCE பிரின்ஸ்

**துருப்பிடிக்காத உலோக கிச்சன் சின்க்**

**நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கல்**

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.






ஏக விநியோகஸ்தர்கள்:
**சென்ற் அந்தனீஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்**
காட்சியறை: 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-5, 337253-5, 436779 பெக்ஸ்: 446554
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 575666

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### எமது அன்பு அப்பாவின்

## ஓயாத நினைவலைகள் - மூன்றாம் ஆண்டு

மண்ணுலகு 1934 - 07 - 25

விண்ணுலகு 2000 - 03 - 10



### அமரர்

## சிவக்கொழுந்து சீனிவாசகம்

அன்புத் தந்தையின் நினைவு மூன்றாண்டு
சென்றாலும் வாட்டுகின்றது எம் மனதை
அன்பினால் எம்மை அதிசயமாய் வளர்த்தீர்கள்
தீமைகள் வராது திடமுடன் காத்தீர்கள்
எந்த குறையுமின்றி எம்மை சுகமாக வாழ வைத்தீர்கள்
பொறுமைக்கு பொறுப்பாகி அமைதிக்கு அருமருந்தாய்
ஆலோசனை செய்த உள்ளம்
வான்வீட்டு பறவையாக வாழ்கின்ற அப்பாவே
வாழ்ந்திடுமே எம் வீட்டு நினைவோடு.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*62, புதிய செம்மணி வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.* (15317)

தகவல்
அன்பு மனைவி (சீ.பாக்கியம்)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# உலகெங்கும் அதிகரித்து வரும் மகளிர் மீதான வன்முறைகள்

இன்று மகளிர் தினம் அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

உலகில் காணப்படும் வளங்களில் மனித வளமே மதிப்பு வாய்ந்தது. இம்மனிதன் உற்பத்தியாளனாக, நுகர்வோனாக, அழிப்பவனாகக் காணப்படுகின்றான். உளரீதியாகச் சிந்தித்து பௌதிக ரீதியாக வளங்களைக் கண்டறியும் ஆற்றல் மிக்கவன். தான் வாழும் இயற்கையுடனும் கலாசார சூழலுடனும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றான்.

எனினும், சில சந்தர்ப்பங்களில் இவ்விரண்டையும் வெற்றியும் கொண்டுள்ளான். வளவாய்ப்புக்களைப் பயன்படுத்துவதில் ஈடுபாடு கொண்டுள்ள மனிதனின் அறிவுவிருத்தி, வளப்பரம்பல் என்பவற்றிற்கேற்ப தாம் வாழும பிரதேசங்களை விருத்தி செய்யும் ஆற்றலையும் கொண்டுள்ளான். அத்தகைய ஆற்றல் படைத்த மனிதனில் பலர் ஆண், பெண் என்ற நிலையில் பெண்களைப் பலவீனப்படுத்துபவர்களாகவும் அவர்களது இயற்கையான வளர்ச்சியை செயற்கையாக தடைசெய்பவர்களாகவும் காணப்படுகின்றனர். விருத்திபெற்ற நாடுகளாயினும் சரி வளர்முக நாடுகளாயினும் சரி மக்களிடையே இந்த நிலை அதிகரித்துவருவதைப் பல்வேறு மானிடவியல், சமூகவியல், உளவியல், குடிப்புள்ளியியலறிஞர்கள் வெளிப்படுத்தி வருவதை அண்மைக்காலங்களில் அவதானிக்கக் கூடிய துர்ப்பாக்கிய நிலையாகும்.

2001 ஆம் உலகின் குடித்தொகை



6 ஆயிரம் மில்லியனாகும். இவர்களில் ஆண், பெண் பால் விகிதம் 51.49 ஆகும். பொதுவாக உலகில் 993 பெண்களுக்கு 1000 ஆண்கள் வாழ்ந்துவருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் குடிப்புள்ளியியல் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

விருத்திபெற்ற ஐரோப்பா, வட அமெரிக்காவில் 1000 ஆண்களுக்கு முறையே 1016, 1051 பெண்கள் காணப்பட வளர்முக நாடுகளில் ஆபிரிக்கா, ஆசியா, லத்தின் அமெரிக்கா கண்டங்களில் 1000 ஆண்களுக்கு 967, 965, 995 பெண்கள் காணப்படுகின்றனர். ஓசானியாவில் 1000 ஆண்களுக்கு 983 பெண்கள் வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது, பொதுவாக ஆண், பெண் பிறப்புகள் ஏறத்தாழ சமநிலையில் காணப்பட வளர்முக நாடுகளில் பெண்களை விஞ்சிய ஆண்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இந்தியாவில் 2001 ஆம ஆண்டுக் கணிப்பீட்டின் பிரகாரம் 1000 ஆண்களுக்கு 927 பெண்களே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகில் விரைவாக அதிகரித்து வரும் குடித்தொகையினால் ஏற்பட்டு வரும் பிரச்சினைகள் பல உணவு, உடை, உறையுள் என்பவற்றில் காணப்படும் போதாக்குறை அல்லது சமபங்கீடு இன்மை போன்றவற்றால் அல்லறபடும் பெரும்பாலான உலக மக்கள் தாமாகவே தமது மனச்சாட்சிக்குப் புறம்பாக வேண்டத்தகாத மனித நடத்தையின் விளைவாக பல விடயங்களில் உலக சமூகத்தின் ஆரோக்கியத்துக்கும் பால்விகித சமநிலைக்கும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருவதை அண்மைக் காலங்களில் தெளிவாகக் காணக்கூடிய பண்பாகவுள்ளது.

இதற்கு வேகமாக விருத்தி பெற்று வரும் விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவியலின் வளர்ச்சியும் பல சந்தர்ப்பங்களில் விரும்பியோ, விரும்பாமலோ சார்பு ரீதியிலான பங்களிப்பினை நல்கி வருகின்றது. என்பதை மறுக்கமுடியாது. இவற்றின் விளைவாக பெண்கள் சமூகம் பல்வேறு வழிகளில் துன்பத்துக்குள்ளாக்கப்பட்டு வருவதுடன் பால் விகிதத்தில் பெண்களின் பங்கு குறைவடைவதையும் பல நாடுகளின் புள்ளிவிவரங்களினை நோக்குமிடத்து அறியலாம்.

குறிப்பாக வளர்முக நாடுகளில் இதன் தாக்கம் அதிகரித்து வருவதனால் சமூக, பொருளாதர, பண்பாட்டுப் பிரச்சினைகளைத் தோற்று வித்தும் வருகின்றன. அதாவது கருக்கலைப்பு, பாலினத்தேர்வு என்பன மருத்துவ தொழில்நுட்ப அறிவியலுடன் தொடர்புடையதாகவிருக்க, சிசுக்கொலை, பாலியல் தொழில், வரதட்சனைக் கொடுமை, பாலியல் வல்லுறவு, பெண்களின் அந்தஸ்தினை செயல் வடிவில் அங்கீகரிக்காமை போன்றன பாதகமான சமூக பண்பாட்டு நிலைகளாக வளர்ச்சியடைந்து வருகின்றன. உலக சமூகம் பல்வேறுபட்ட பிரச்சினைகளை நேரடியாகவோ அன்றில் மறைமுகமாகவோ எதிர்கொள்ள வேண்டிவருவதை உணரத தொடங்கியுள்ள போதிலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதுள்ளதைக் காணமுடிகின்றது.

வளர்முக நாடுகளில் குறிப்பாக ஆசியா மற்றும் ஆபிரிக்கக் கண்டங்களில் அதிகளவு, பெண்பிறப்புக்களை வெறுக்கும் நிலையினையும் அவர்களுக்கான அந்தஸ்தை வழங்காது பலவேறு வழிகளில் துன்புறுத்தல்களுககுள்ளாக்கி வருவதையும் பல்வேறு மனிதநேய அமைப்புக்களால் சர்வதேச அரங்குக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இந்தியாவில் காவல் நிலையங்களில் பதிவுசெய்யப்பட்ட முறைப்பாடுகளின் பிரகாரம் 54 நிமிடங்களுக்கொரு முறை ஒரு பாலியல் வல்லுறவும் 26 நிமிடங்களுக்கொருமுறை ஒரு மானபங்கப்படுத்தலும் 43 நிமிடங்களுக்கொரு முறை ஒரு கடத்தல் எனவுமாக ஒட்டு மொத்தமாக 7 நிமிடங்களுக்கொருமுறை பெண்களுக்கெதிரான ஏதாவது ஒரு குற்றம் நிகழ்த்தப்படுகின்றது. இவை தவிர, பதிவுசெய்யப்படாத குற்றங்கள் இவற்றைவிட அதிகமாக இருக்கலாம் என மதிப்பிடப்படுகின்றது.

ஆண், பெண் இருபாலாரும் உலகில் ஒரே அளவினராக வாழ வேண்டும் என்பது ஒரு பொதுவான நிலையாகும். எனினும் பிறப்பு, இறப்பு இடமபெயர்வு ஆகிய குடித்தொகை இயக்கப்பண்புகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் சமநிலையில் மாற்றங்களை ஏற்படுத்தவல்லன. கருவள காலத்திற்குப்பிற்பட்ட நிலையில் பெண்களின் இறப்பு வீதம் குறைவாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஐக்கிய அமெரிக்காவில் 65வயதுக்குள் 100 பெண்களுக்கு 85ஆண்களே வாழ்கின்றனர். அதேபோலவே 85வயதுக்கு மேல் 100பெண்களுக்கு 44ஆண்களே வாழ்கின்றனர். அதாவது பெண்களின் சராசரி ஆயுள் எதிர்பார்ப்பு ஆண்களை விட அதிகமானது என்பதே ஆகும்.

உலகில் மிக நீண்டகாலமாக ஆண் பிறப்புக்களை விரும்பி ஏற்பதும் பெண் பிறப்புக்களை வெறுப்பதும் எல்லாச் சமூகங்களிலும் காணக்கூடிய பண்பாகவே இருந்து வருகின்றது. உணவு, உடை, கல்வி மருத்துவம் தொற்றுநோய் தடுப்பு, நலன்பேணல், நல்லெண்ணம் போன்றவற்றில் பெரும்பாலான பெண்கள் பெரிதும் புறக்கணிக்கப்படும் நிலையையே காண முடிகின்றது.

இந்திய கலாசாரத்தில் மகள் ஒரு சுமையாவும் மகன் பெறுமதிமிக்க வளமாகவும் கருதப்படுகின்றது. புராணக்கதைகள், கட்டுக் கதைகளிலும் நடைமுறையிலுள்ள வழக்குகளிலும் ஆண்களுக்கும் ஆண்பிறப்புக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. மதரீதியாக இந்துமதம் மட்டுமல்லாது பிற மதங்களும் ஆண் பிறப்புக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. யூதகலாசாரத்தில் ஆண் குழந்தைகளைப் பெற்ற குடும்பத்தினருக்கு விசேட அந்தஸ்து அளிக்கப்படுகின்றது. இஸ்லாமிய வழக்கிலும் ஆண்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

சமூகவியல், உளவியல் ஆய்வுகள் கூட மக்களிடையே ஆண்கள் முக்கியப்படுத்தப்படுவதாக தெரிவித்து வருகின்றன. அதாவது, ஒரு குடும்பத்தில் பெண் குழந்தைப் பிறப்பானது வந்து போகும் ஓர் அங்கத்தவரே எனவும் ஆண்கள் பரம்பரை அல்லது வம்சத்தின் தொடர்ச்சியினையும் குடும்பப் பெயரையும் உறுதிப்படுத்துகின்றனர் எனவும் கூறுகின்றனர்.

இந்நிலையில், பெண் பிறப்புக்களை விரும்பியேற்காத நிலையிலும் பிறந்த குழந்தைகளை பராமரிக்கும் நிலை காணப்பட்டு வந்த போதிலும் அண்மைக் காலங்களில் பெண்களுக்கெதிரான நேரடியான மற்றும் மறைமுகமான வன்முறைகள் வளர்முக நாடுகளில் குறிப்பாக உலகில் அதிக குடித்தொகையைக் கொண்ட சீனா, இந்தியாவிலும் ஆபிரிக்க நாடுகளிலும் வியாபித்து வருவதைக் காணமுடிகின்றது. உலகில் வாழும் மக்களில் 60 சதவீதத்திற்கு மேற்பட்டோர் பலவீனமான பொருளாதாரநிலை, வசதிகளற்ற குடியிருப்புக்களில் வாழல், வேலை வாய்ப்பற்ற நிலை, அதிகளவு பிறப்புக்களும், இறப்புக்களும், சமூகப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளமை, நீர்ப்பிரச்சினை என்பன ஒரு புறம் வருத்த பாதுகாப்பற்ற பலருடனான பாலுறவு நடத்தைகள், கருக்கலைப்பு, குழந்தைக்கொலை, சிறுவர் துஷ்பிரயோகம், சீதனக் கொடுமை, பெண்களின் சமூக அந்தஸ்தை அங்கீகரிக்காமை, விபச்சாரம், பாலியல் வல்லுறவு, உணவு உட்கொள்ளலில் போதாத நிலை போன்ற பல விடயங்களில் பாரதூரமாகப் பாதிப்புக்குள்ளாவதுடன் பால் விகிதத்தில் மாற்றங்களையும் ஏற்படுத்தி பல்வேறு சமூக, பொருளாதார பண்பாட்டுப் பிரச்சினைகளைத் தோற்றுவித்து வருகின்றன.


வளர்முக நாடுகளில் பால் விகிதத்தை பெருமளவிற்கு பாதிக்கக்கூடியவை பாலினத்தேர்வு, பாலினத்தை முன்கூட்டியே தெரிவுசெய்தல், சிசுக்கொலை என்பனவாகும். இவற்றுள் முதலிரண்டும் நவீன மருத்துவ தொழில்நுட்ப விருத்தியின் விளைவினாலும் மூன்றாவது நலிந்த பொருளாதர நிலையுடன் மூடநம்பிக்கையும் அறியாமையும் காரணங்களாக அமைகின்றன. பாலினத்தேர்வானது கர்ப்பத்திலுள்ள சிசுவினை பாலினத்தேர்வு செய்யும் மையங்களின் மூலம் பரிசோதனை செய்து பெண்சிசுவாயின் அதனைக் கருக்கலைப்புச் செய்வதன் மூலம் அழித்து விடும் நிலை விருத்தி பெற்ற நாடுகளில் ஆங்காங்கே காணப்பட்டாலும் விருத்தியடையாத நாடுகளில் பொருளாதார ரீதியில் நடுத்தர வர்க்கத்தினரிடையேயும் அதற்கு மேற்பட்டோரிடையேயும் அதிகரித்து வருவதாக உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைகளின் மூலம் அறிய முடிகின்றது.

இத்தகைய கருக்கலைப்பானது சட்டவிரோதமானதாக இருப்பினும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிலையங்களில் சட்ட விரோதமாகவோ அன்றில் சட்டத்தினை இசைவுக்குட்படுத்தியோ செய்யப்படுவதைக் காணலாம். 1993/94ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் பிரதான நகரமொன்றில் 78 ஆயிரம் கர்ப்பத்திலுள்ள பெண் குழந்தைகள் கருக்கலைப்பின் விளைவாக உயிர்ப்பிறப்பாகவில்லை என நியூ சயண்டிஸ்ட் என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது. 1992ஆம் ஆண்டில் மும்பாய் நகரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் 8 ஆயிரம் பெண்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கருக்கலைப்பின் போது 7ஆயிரத்து 999 பெண்கருவாக இருந்ததனாலேயே மேற்கொள்ளப்பட்டதாக அறிய வருகின்றது. இந்தியாவில் சார்பு ரீதியாக இரண்டு அல்லது மூன்று பெண் குழந்தைகளைப் பெற்றவர்களிடையே அதிகளவு கருச்சிதைவு மேற்கொள்ளப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

கருவில் ஆணா, பெண்ணா எனக் கண்டறிந்து கருச்சிதைவு செய்யும் முறை ஒருபுறம் வளர்ச்சி பெற கருவுறுமுன் எந்தக் குழந்தைவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் நுட்பமுறையினை செயற்படுத்துதல் அண்மைக் காலங்களில் வளர்ச்சி பெற்று வருகின்றது. இதனால், ஆண் குழந்தைகளை விரும்பிப் பெற்றுக்கொள்ளும் நிலை அதிகரித்து வருகின்றது. உதாரணமாக இந்தியாவில் பாலினத்தை முன்கூட்டியே கண்டறிவது சட்டப்படி குற்றமாகும். ஆனால், கருவுறுமுன்னர் பாலினத்தைத் தீர்மானித்து கருவுறச் செய்வது பற்றி சட்டத்தால் குறித்துரைக்கப்படவில்லை. இதனால் இவற்றை மேற்கொள்ளும் நிலையங்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கொள்கின்றன என்கின்றனர் குடும்பநல அதிகாரிகள். உதாரணமாக மதுரையில் இயங்கிவரும் Centre for Fertility Tests and Assisted Reproductive Technologies என்ற உயிரணுத்தேர்வு மையத்தின் செயற்பாடு பல்வேறு மகளிர் அமைப்பினரின் எதிர்ப்பின் விளைவாக இழுத்து மூடப்பட்டுள்ளது.

பேராசிரியர் கா.குகபாலன்
தலைவர், புவியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்

எனினும், வட இந்தியாவில் பல மாநிலங்களில் இத்தகைய மையங்கள் சிறப்பாகச் செயற்பட்டுவருவதாக பெண்கள் அமைப்பினர் அங்கலாய்க்கின்றனர். இந்தியாவில் பீகார் மாநிலத்தில் சிசுக்கொலை புரிந்த பெற்றோரிடம் கருச்சிதைவுக்கான காரணிகளைக் கண்டறியும் நோக்குடன் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் பெண் குழந்தை வளர்ப்பு, அதன்பின் சீதனம் என பல இலட்சங்களைச் செலவு செய்யவேண்டியதாக இருக்கும். ஆனால், கருச்சிதைவினைச் செய்து கொள்ள 5 ஆயிரம் ரூபாவே போதுமானது எனத் தெரிவித்துள்ளனர் என பிறிதோர் ஆய்வு தெரிவிக்கின்றது.



விளம்பரங்களில் பெண்கள் பயன்படுத்தப்படும் முறை, இதுவும் அவர்கள் மீதான வன்முறைகளில் ஒரு வகையே.

ஆண், பெண் பால் விகிதத்தில் பெண்களின் பங்கு குறைவடைந்து வருவதற்கு நலிந்த பொருளாதார அமைப்புககுள் வாழும் குடும்பங்களில் நிகழ்ந்துவரும் பெண் சிசுக்கொலை முக்கியத்துவம் பெறுகின்றது. உலகில அதிக குடித்தொகை கொண்ட சீனா, இந்தியாவில் சிசுக்கொலையானது முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்துச் செல்வதை அண்மைக்காலப் புள்ளிவிவரங்கள் மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது.

இதற்கான காரணிகளாக வறுமை, பொருளாதர நடவடிக்கையில் பெண்கள் ஈடுபாடு குறைவாகக் காணப்படுகின்றமை, குடும்பச்சுமை, வம்சசமூக அமைப்பு, மத நம்பிக்கை, மிகப் பெரியளவிலான சீதனக்கேள்வி, பகட்டான் விவாகங்கள் மற்றும் சில சடங்கு முறைகள் போன்ற பல காரணிகளால் பெண் சிசுக்கொலையினைச் செய்கின்றனர்.

இந்தியாவில் சட்டத்துக்குப் புறமபாக பெண்குழந்தைகளைக் கொல்வது நாளொன்றுக்கு 35 - 45 ஆகக் காணப்படுகின்றது. இந்நாட்டில் பெண் குழந்தை இறப்புக்களில் ஆறிலொரு பங்கு சிசுக்கொலையினால் நிகழ்கின்றது.

தமிழ்நாட்டில் சேலம், உசிலம்பட்டி, மதுரை, தவமபுரி, கோவைப்பகுதிகளில் பெண் சிசுக்கொலை அதிகரித்துள்ளது தமிழ்நாடு அரசே ஒப்புக்கொள்கின்றது. சீனாவில் பெண் சிசுக்கொலை அதிகரித்திருப்பதால் 10.0 மில்லியன் பெண்கள் விவாக நிலையில் பற்றாக்குறையாக உள்ளனர் என பிறிதொரு ஆய்வு தெரிவிக்கின்றது.

இவைதவிர, இளவயதில் திருமணம் பாதுகாப்பற்ற நிலையில் பாலுறவு கொள்ளல், தசாப்புணர்ச்சி, பாலியல் தொழில், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற நிகழ்வுகளால் பெண்கள் இறப்பினைத் தழுவிக்கொள்வதும் வளர்முக நாடுகளில் காணப்படும் பொதுவான நிகழ்வாகும்.

2000 ஆம் ஆண்டில் 36 மில்லியன மக்கள் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளும் ஆவர். தகாத பாலியல் உறவு கொள்வதனாலேயே எயிட்ஸ் நோய் பெருமளவிற்குபரவுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக இந்நோய் ஆண்களை விட பெண்களுக்கே அதிகம் தொற்றுவதற்குரிய வாய்ப்புக்கள் உள்ளன. மேலும் சிறுவர் துஷ்பிரயோகத்தில் சிறுமிகளே அதிகளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

வறுமை, பெற்றோர் புறக்கணிப்பு வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கான நிர்ப்பந்தம், கூடா நட்பு, பாலியல் தொழிலில் ஈடுபட பெற்றோரின் தூண்டுதல் போன்ற பல காரணிகள் இதற்கு உந்துசக்தியாக உள்ளன. வளர்முக நாடுகளில் பத்து சதவீதமான சிறுவர்கள் பால்வினை நோய்குள்ளாகியுள்ளனர். இவர்களில் 65 சத வீதத்தினர் பெண்களாவர். இந்தியாவில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண்களில் 25 சதவீதமானோர் 16 வயதிற்குட்பட்ட பெண்களாவர். இந்தியாவில் பின்தங்கிய வகுப்பினரிடையே சிறுமிகளை தேவதாசிகளாக்கும் வழக்கம் இன்றுவரை நிலவுகின்றது. இதற்கு வறுமையும், மூடநம்பிக்கையுமே காரணமாகும்.

அதேபோல வரதட்சணைப் பிரச்சினைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் பெண்களாவர் உதாரணமாக இந்தியாவில் ஒரு நாளைக்கு வரதட்சணைக் கொடுமையினால் சராசரி 45 பெண்கள் தற்கொலை முயற்சி செய்கின்றனர். தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டு முதல் ஒன்பது மாதங்களில் 904 வரதட்சணை முறைப்பாடுகளும் 445 வல்லுறவு முறைப்பாடுகளும் ஆயிரத்து 614 பாலியல் பலாத்கார முறைப்பாடுகளும், 224 பெண் கடத்தல் முறைப்பாடுகளும் 2ஆயிரத்து 422 ஆபாசமாகப் பேசியதான முறைப்பாடுகளும் காவல் நிலையங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. முறைப்பாடுகளைத் தெரிவிக்காதவர்கள் இதனை விட அதிகமாகவிருப்பர் எனலாம்.

மேற்குறித்த பெண்களுக்கெதிரான நேரடியான, மறைமுகமான நிகழவுகளால் பெண்கள் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களாக இருப்பது மட்டுமலலாது பெண்களை விஞ்சிய ஆண் பிறப்புக்களால் பல்வேறுபட்ட சமூக,

(08ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இந்தியத் தயாரிப்பிலான புதிய நீளகோண்கள் **24", 18"**, அவுசா அம்புகள் (SSA 250m) விற்பனைக்குண்டு. தொடர்பு: M.மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு. (15199)

நிறைகூடிய தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. வேண்டிய நிறைகளில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, (முடமாவடி. (சி-26826)

நவாலி வடக்கு, மானிப்பாயில் நன்னீர் பங்குக்கிணற்றுடன் 21/2 பரப்புக் காணி மட்டும் விற்பனைக்குண்டு. மற்றும் முதிரை மரத்தில் செய்யப்பட்ட சாப்பாட்டு மேசையும் 6 கதிரைகளும் புத்தக சோக்கேசும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆனந்த பவன், மயிலு ஒழுங்கை, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை. (15283)

புதிய குட்றிச் (தமிழ்) ரைப்றைற்றர் (Godrej Prima Double Carrier) தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.பி.ம. ஆரோக்கியநாதர், இல. 32/05, அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். (15323)

மோட்டரோலா தொலைபேசி விற்பனைக்குண்டு தொடர்பு: ஸ்ரீராஜ், சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை, 021-222 5536. (15321)

**Prima Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர், வீடியோ சென்ரா வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15288)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. 1Kg 140/- சுத்தம்செய்து வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. 3529, 2867. (15326)

கல்பேட்ஸ், புறொயிலர் 1Kg 140/- சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் Lion பொம்மேரியன் நாய்க் குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜான்ஸ் பாடசாலை அருகில், டச் றோட், உடுவில். (15330)

## மணமக்கள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த B.Sc., என்ஜினியர், வயது 31 மணமகனுக்கும், B.Sc. வயது 27 மகளுக்கும் நன்கு படித்த மணமக்கள் தேவை. தொடர்பு: ச.அன்ரன் செல்வராஜா, மொட்டோன், பஸ்நிலையம், நெல்லியடி, கரவெட்டி. (15299)

## மணமகள் தேவை

கௌரவ குடும்ப பொறியியல் பட்டதாரியும் பட்டப்பின் படிப்பைத் தொடரும் கூட்டுத்தாபனத்தில் தொழில புரியும் 31வயது மணமகனுக்கு பொருத்தமான MBBS இறுதி ஆண்டு அல்லது தொழில்புரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: வி.இ. 1834, C/o உதயன். (15308)

## மணமகன் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, உத்தராடம் 2ஆம் பாதம், 38வயதுடைய விவாகரத்துப் பெற்ற அரச அதிகாரியாகக் கடமையாற்றும B.Sc. பட்டதாரி மணமகளுக்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். முழுவிவரத்துடன் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும். தொடர்பு க.சுதர்சன், 7/6, U.C. வீட்டுத்திட்டம், லிங்கநகர், திருகோணமலை. (15253)

யாழ்.கௌரவ கிறிஸ்தவ குடும்பப் பெற்றோர் 1972இல் பிறந்த, 5'5" உயரம், மெலிந்த, அழகான (Fair& Lean) நன்கு படித்த, ஆங்கில அறிவுள்ள மகளுக்கு, Dr./Engineer/ M.Sc./B.Sc. தகைமையுள்ள மணமகனை உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ எதிர்பார்க்கின்றனர். இந்துக்களும் விண்ணப்பிக்கலாம். சீதனம் வழங்கப்படும். தொடர்பு T.P. 0777-630168, E-mail prop 228 @ yahoo.com விளம்பர இல. 18135, உதயன், யாழ்ப்பாணம். (15337)

## தேவை

நல்ல நிலையிலுள்ள ஒலிம்பியா தட்டச்சு இயந்திரம் தேவை. தொடர்பு: க.சிவசுப்பிரமணியம், சட்டத்தரணி, உரும்பிராய். (15335)

## வீடு விற்பனைக்கு

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கில் 10பரப்பில் அடங்கிய இரண்டு வீடுகள் நன்னீர்க்கிணறு, மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு. பலாலி வீதிக்கு அண்மையாக. தொடர்புகளுக்கு: திருமதி ஞானமணி மகாதேவன், சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். திருமதி R.சிவஞானம், ஐயனார் கோயில் வீதி, சண்டிலிப்பாய். (15170)

## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Ford Escoart கார், LML ஸ்கூட்டர் சகல ஆவணங்களுடனும் உடன் விற்பனைக்கு உண்டு. கார், மோட்டார் சைகிள்களுக்கு மாற்றிக் கொடுக்கப்படும். தொடர்பு: இல.36, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (15309)

## DOBERMANN PINCHER PUPS

**Pedigreed Registered Big boned Black &Tan, Liver Brown issabella colour High Quality pups form our andigama kennels colombo to be delivered on 15.03.2003 Booking accepted till. 13.03.2003 Thanapalasingham (Nallur Video centre compound) 19, Murugesar Lane - Nallur. (15287)**

## தவறிவிட்டது

பட்டமளிப்பு விழா சான்றிதழ்கள் இரண்டு (Degree, Diploma) 06.03.2003 அன்று ஆனைப்பந்தி அரவிந் ஸ்ருடியோவிற்கு அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அரவிந் ஸ்ருடியோ, 291 (431), நாவலர் வீதி, ஆனைப்பந்தி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T.P. 2190 (15331)

## பணிநிலை வேண்டுகை

வன்னியில் பல கிளைகளைக் கொண்டியங்கும் முன்னணி நிறுவனத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையும் முன்பட்டறிவுமுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலைகள்:**

பணிநிலை
01. கணக்குப் பதிவாளர்
02. களஞ்சியக் காப்பாளர்
03. எழுதுநர்கள்
04. உணவு பரிமாறுபவர்
05. பாதுகாப்புப் பணியாளர்
06. சமையலாளர்
07. விற்பனையாளர் (Hardware, Building Materials, Spair parts)

**கல்வித் தகைமை:**

1ஆம், 2ஆம், 3ஆம் பணிநிலைகளுக்கு:
**க.பொ.த. (சாதாரணதர) தேர்வில் தேர்ச்சியும், மேற்பட்ட கல்வித் தகைமைகளும்.**

4ஆம், 5ஆம் பணிநிலைகளுக்கு:
**10ஆம் வகுப்பில் கற்றிருத்தல் வேண்டும்.**

6ஆம் பணிநிலைக்கு:
**ஹோட்டல் முகாமைத்துவம் கற்கை நெறியில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு முன்னுரிமையுண்டு.**

7ஆம் பணிநிலைக்கு:
**8ஆம் வகுப்பில் தேர்ச்சியடைந்திருத்தல்.**

அகவையெல்லை : 18 - 50
பால்: : ஆண்கள் மட்டும்
பட்டறிவு : 1ஆம், 2ஆம், 3ஆம் பணிநிலைகளுக்கு குறித்த பணியில் ஓர் ஆண்டுக்கு குறையாத பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

4ஆம், 5ஆம் பணிநிலைகளுக்கு:
குறித்த பணியில் நன்மதிப்புள்ள நிறுவனமொன்றில் இரண்டாண்டு பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6ஆம் பணிநிலைக்கு:
மேனாட்டு, உள்நாட்டு உணவு தயாரிப்பில் 2 ஆண்டுகளுக்குக் குறையாத பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

7ஆம் பணிநிலைக்கு:
இரும்பகம், கட்டடப் பொருள், வாகன உதிரிகள் விற்பனை நிலையத்தில் பணியாற்றிய பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

*நிறுவனம் வழங்கும் சிறப்புச் சலுகை*

☆ உணவு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
☆ தொலைவிடங்களிலிருந்து வரும் பணியாளர்களுக்கு போக்குவரத்து வசதிசெய்து கொடுக்கப்படும்.

வேண்டுகைகள் யாவும் கீழ்க்காணும் முகவரிக்கு தங்கள் சொந்தக் கையெழுத்தினால் எழுதி, 15.03.2003ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல.: 1812
மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.
(C26801)

# உலகெங்கும்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சினைகளுக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட ஏதுவாகின்றது. விஞ்ஞான தொழில்நுட்பத் துறையில் உலகம் கண்டு வரும் அபார வளர்ச்சியானது பால் விகித நிலையினை இயற்கையுடன் விட்டுவிடுவதே சிறப்பானதாகும். அத்துடன், பெண்களின் கல்விக்கு சர்வதேச சமூகம் முக்கியத்துவத்தினை அளித்து, அவர்கள் குடும்பத்தில், சமூகத்தில், பிராந்தியத்தில், நாட்டில் சமஅந்தஸ்துடன்வாழ வழி சமைப்பதன் மூலமே பெண்ணது உரிமையை வென்றெடுக்க முடியும்.

பெண்கள் அபிவிருத்திக்கு உழைப்பதாகக் கூறும் அமைப்புக்கள் பெணகளிடையே காணப்படும் சாதாரண பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு நின்றுவிடாது குறைவடைந்துவரும் பால் விகிதத்தினால் ஏற்படக்கூடிய சமூக, பொருளாதார, பண்பாட்டு மற்றும் உளவியில் ரீதியான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படவேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

எமது அயல்நாடுகளில் பெண்கள் தொடர்பான பாதகமான விளைவுகள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையினை எமது நாட்டுக்குள் உள்வரவிடாது பாதுகாப்பது அரசின் கடமை மட்டுமல்லாது பெண்கள் தொடர்பான அமைப்புக்களின் கடமையாகும். பால விகிதத்தில் பெண்களின் பங்கு குறைவடைந்து வருவதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை சமூகத்தின் சிந்தனைக்கும் செயற்பாடுகளுக்கும் எடுத்துச் செல்வது அவர்களின் தலையாய பணியாகும்.

(ம)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

**வணிகமாணி பகுதி I - 2001 தேர்வு**

**10.03.2003 தொடக்கம் நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.**

**பரீட்சை நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

07.03.2003 (C-26835) **- பதிவாளர்.**

## பிற்போடப்பட்டுள்ளது

**உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினரால் 09.03.2003 இல் இடம் பெற இருந்த "அரிச்சந்திரா மயான காண்டம்" நாடகம் எதிர்பாராத தடங்கலினால் 16.04.2003இற்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை எம்மிடம் அனுமதிச்சீட்டு வேண்டியவர்களுக்கு மிகவும் கவலையுடன் அறியத்தருகின்றோம்.**

**ச.ஏகாம்பரநாதன் J.P.** தலைவர் (C-26834) **அ.ஈஸ்வரநாதன்** செயலாளர்

## மரண அறிவித்தல

### நாகப்பர் சின்னத்தம்பி

புலவரோடை, வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த நாகப்பர் சின்னத்தம்பி நேற்றுமுன்தினம் (06.03.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற நாகப்பர் - சிவகாமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசவின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வேதவனம் ஆகியோரின் அன்பு மருமகனும வள்ளியம்மையின் அன்புக் கணவரும் குலசிங்கம் (மேலதிக காணிப்பதிவாளர், பருத்தித்துறை), குலவதி, குலக்கண்ணன் (சவூதி அரேபியா), இராசலட்சுமி, குலதாசன் (கச்சேரி, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சகுந்தலாதேவி, பாலகிருஷ்ணன் (நில அளவையாளர், சவூதி அரேபியா), பத்மராணி, சச்சிதானந்தம், புஷ்பமலர் (கமநலசேவைத திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுப்ரமணியம், சுந்தரம், தர்மலிங்கம், அம்பலவாணர், இராசம்மா, சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரியதர்சினி (வெளிவாரி வர்த்தகம், 2ஆம் வருடம்), சங்கீதா (வட. இந்து மகளிர் கல்லூரி), முரளிதரன் (மருத்துவபீடம், மூன்றாம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), செந்தூரன், தர்சன் (ஹாட்லிக் கல்லூரி), அபிராமி, திருபரன், வித்யா, சுதாகர், பிருந்திகா, மயூரதன், ராஜிகா (யா/நெ.மெ.மி.த.க.பாடசாலை), தனுஷன், சோபிகா, கிருத்திகா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் திருஞானச்செல்வனின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.03.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலவரோடை,*
*வதிரி,*
*கரவெட்டி வடக்கு.* (15332)

தகவல்.
சி.குலசிங்கம்
(மகன்)



# பாவையர்கள் தலைநிமிர்ந்து வாழ பாரினில் பகுத்தறிவு ஓங்க வேண்டும்

நமது பைந்தமிழ் நாட்டுப் பாவையர், சங்க காலத்திற்கு முன்னரே நாட்டின் திலகமாகத் திகழ்ந்தனர். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த காலத்தில அறிவுரை வழங்கும் ஆற்றல் வாய்ந்த அருங்குணக்குன்றாக அழகு சேர்த்தனர். போரைத் தவிர்க்கும் புலவர் மணிகளாக ஒளி வீசினர்.

அன்பின் இருப்பிடமாக - அறம் வளர்க்கும் நிலையமாக - வீடு விளக்கமடைந்தது. வாழ்க்கைத் துணை நலத்தின் வலிமையால் ஆண்கள் ஏறுநடைபோடும் ஏந்தல்களாக ஏற்றம் பெற்றனர்.

இடைக்காலத்திலோ பாவையர் கல்வியும் உரிமையும் இல்லாத ஏதுவால் இருளிலே தவித்தார்கள். படிப்பது பாவம் என்னும் அலையால் சமுதாயத்தில் கடை நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். "பெண்களுக்கு எதைக கொடுத்தாலும் கொடு; கல்வியறிவை மட்டும் கொடுத்து விடாதே!"என்னும் கபடர்கள் மொழியால் குருடாக்கப் பட்டார்கள்.

சமயக் கருத்துக்களால் தாக்குண்டு மருகினார்கள்!. சாதிப்பிரிவுகளால் சால்பை இழந்து நலிந்தார்கள்!! விதவைகள் என்ற பெயரால் கட்டாயமாக உடன்கட்டை ஏற்றப்பட்டார்கள். தமிழகத்தில் குழந்தை மணங்களால் குற்றுயிராக்கப்பட்டார்கள்.

பொருந்தா மணங்களால் வெம்பி வெதும்பினார்கள். பொட்டுக்கட்டும் வழக்கத்தால் புரையோடி மாண்டார்கள். குருட்டுப் பழக்கங்களால் கோணல் நெறி சென்று குணமிழந்து - மணமிழந்து அடிமைகளாய் அல்லற்பட்டார்கள். இல்லத்தை ஆண்டு எழில் சேர்த்தவர்கள் இடர்க்கடலிலே மிதந்தார்கள். இல்லறச் சிறைகளிலே ஏங்கித் தவித்தார்கள்.

ஆண்களின் வேலைக்காரியாக - கட்டிலறைப் பதுமைகளாக - மாற்றப்பட்டு வேதனைத் தீயில் கருகினார்கள். தாய்மொழி பேணிய தங்கம் நிகர் வனிதையர், தாய் மொழியின் அருமை



அறியாத பேதைகளாயினர்.

இன்றோ வெள்ளையர் ஆட்சியாலும் விடுதலை பெற்றமையாலும் கல்விக்கண் பெற்று விளங்கும் கனிவான நிலைக்கு வந்துள்ளனர். பல்கலைக் கழகங்களில் - சட்ட மன்றங்களில் ஆய்வுத்துறைகளில் அணி செய்கின்றனர். பொறியியலாளர்களாக - மருத்துவர்களாக பணியாற்றுகின்றனர். ஆனால், இன்றும் பெரும்பாலான பெண்கள் எழுத்தறிவே இல்லாமல் மூலையில் முடங்கிக் கிடக்கின்றனர்.

கற்றவர் - கல்லாதவர் என்ற வேறுபாடிற்கிடமின்றி அனைவருமே ஆண்களின் அடிமைகளாக உழல்கின்றனர். நாட்டின் தலைவியாகவே இருக்கலாம்; ஆனால், அவள் வீட் டில் ஆணுக்கு அடிமைதான்! பொருந்தா மணத்தால் புலம்பல்! காதல் மணத்தடைகளால் தற்கொலைகள்! வள்ளுவரின் வாழ் நெறி அறியாத ஏதுவால் மருட்டும் மறைகளால் மானத்தை இழக்கின்றனர்! கணவன் சொன்னதைச் செய்யாமையாலும் கேட்டதைக் கொடாமையாலும் எட்டி உதைக்கப்படுகின்றனர்.

தாய்மொழிப்பற்று, தாய்நாட்டுப் பற்று இல்லாமையால் தடம் புரண்டு செல்கின்றனர். பெரும்பாலான பாவையர் குழந்தைவளர்ப்பு முறைகள் அறியாத குறையுடையோராகவே உள்ளனர். நாட்டின் நடைமுறை தெரியாத நலிந்தவராக, திருமணச் சந்தையில் விற்கப்படும் விலைப்பொருளாகவே உள்ளனர்.

பெண் விடுதலையால் நாடு பீடு பெறும்; பெண் கல்வியால் வீடு விளக்கமுறும்; வீட்டில் பண்புடைய அறிவுடைய மக்கள் தோன்றுவர்; இல்லங்களிலே பகையும் பழியும் பட்டழியும்; அறிவும் அன்பும் ஆட்சிபெறும்; மனமாசு மறையும்; மன நலம் வளரும்; இடும்பை தீரும்; இன்பம் மலரும்; மன்பதை மகிழ்ச்சியுறும்.

பெண்ணடிமை ஒழிப்பால் ஏற்படும் பெருமையை விளக்க வேண்டும். பெற்றோர்கள் பெண்களை ஆமைகளாகவும் ஊமைகளாகவும் கோழைகளாகவும் வளர்க்கக்கூடாது. அஞ்சாமையுடையவர்களாக - ஆற்றல் மிக்கவர்களாக - வளர்வதற்குப் பயிற்சியளிக்கவேண்டும். வானில் பறந்து வெண் திங்களில் இறங்கிப் புதிய வரலாற்றைப் படைக்கும் வீராங்கனைகளாகத் திகழவேண்டும். விசும்பின் இயக்கத்தையும் விண்ணிலுள்ள கோள்கள், விண்மீன்கள் ஆகியவற்றின் நிலையையும் நேரில் கண்டறியும் நேரிழைகளாக நுண்ணறிவு பெறவேண்டும்.

பெண்ணடிமையைப் போக்கும் பெருந்தீயைப் போன்றவை - மாந்தநேயத்துக்கு வழி வகுக்கும் மாண்புடையவை. வனிதையர் இன்று ஓரளவு அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்று உயர்நிலை எய்தியிருந்தாலும் தாயாட்சி மலரவில்லை - பெண்ணரசி என்ற நிலை எய்தவில்லை!

சீர்திருத்தம் செஞ்ஞாயிற் றொளியின் சிந்தனையினால் குருதியோட்டத்தில் நல்லதொரு மாற்றம் ஏற்பட வேண்டும். ஞாலக் காரிருள் கடியும் கதிரவனைப் போன்று பாரிருள் கடியவந்த பகுத்தறிவுப் பகலவனாகப் பாவையர் மாறவேண்டும்.

**அ.பொ.செல்லையா**

தமிழர்கள் தமிழர்களாக - தன் மானமுள்ள தமிழர்களாக - எவர்க்கும் எதற்கும் யாண்டும் அடிமைப்படாத தமிழர்களாக - சுரண்டல்களுக்கு இரையாகாத தமிழர்களாக - தன்னம்பிக்கை கொண்ட தமிழர்களாக - எவ்வினத்தவர்களுக்கும் இணையான தமிழர்களாக - கல்வி, அரசியல், தொழில், பொருள் ஆகிய துறைகளில் வளர்ந்த தமிழர்களாக - வாழ்ந்திட வனிதையர்கள் சில வாய்ப்புகளோடு அமைந்துவிடாது பூரண சுதந்திரம் பெற வேண்டும். ஆணாதிக்கம் அடியோடு அகற்றப்பட வேண்டும். ஆணின்றிப் பெண்ணில்லை; பெண்ணின்றி ஆணில்லை; எண்ணிருவர் சேர்ந்தே இகம் என்ற நிலை உருவாகி தரணியில் தமிழர் மீண்டும் பரணி பாடத் தையலர் தலைநிமிர்ந்து வாழவேண்டும். வாழ்க வனிதையர்! பாவையரின் பகுத்தறிவு வளர்க! மண்ணில் பெண்ணின் சமத்துவம் ஓங்குக! ▲

## சுதந்திரம் என்பது வேறுபட்டது

பெண்களாகி பேரறிவாகி தூண்களாகி...
துன்பங்களாகி, விழுதுகளாகி
விருட்சங்களாகி... மாறுபட்டாய்
மரணித்துப்போகும் பெண்ணின்
துன்பங்கள் என்பது வேறுபட்டது...

தனியே இருந்து தனிமையை வெறுத்து...
காதல் செய்து அன்பை வெறுத்து
சீதனம் என்பதனால் பலதையும் வெறுத்து...
ஆக்கத்தை அளிக்கும் ஆணையும் வெறுத்து...
தாய்மை கொடுக்கும் தன்னையும் வெறுத்து...
வாழ்வதால் மட்டுமேன் உண்மை உள்ளதோ!
உன்னையே நினைத்துப்பார்...
உறுதியாய் உரைத்துப்பார் அன்பினாய்
வடிவம் செய்யும் ஆணை நீ மணந்துபின்
பெண்மையாய் உலகத்தில் பேராற்றல் பெருமை
செய்து... வானமும் பூமிவெல்லும்
வாசகம் கொண்டு நிற்பாய்...
இது உன் காலம் நீயும் உன் நிழலும்
நடக்கும் நிஜம்... அடிமை என்பதில்லை
உனக்குள் இருக்கும் உறுதிக் கரங்களை
ஆலய போலன்றி ஆலமரமாய் விரித்து எழு...
நிழல்தேடி உலகமே உனக்குக் கீழ்...
ஒடுங்கிப் போனாயென்றாய் உன்னை மிதிக்கும்
உலகம்...
கூடு கட்டும் குருவியாய்... மேலே பற...
கடல் வேண்டாம் வானமே பெரிது...
சுதந்திரம் என்பது வேறுபட்டது... இப்போது நீ
அடிமையல்ல .... ஆனந்தக் காற்று...
மெல்ல வீசு இந்த வசந்தகாலமே மாறாதிருக்கும்...
உனக்காக...!

- திருமதி ச.சிவாணி.

## புனித சரித்திரம் படைத்திடு!

*பெண்ணே!*
*நெருப்புக்குப் பயந்து*
*விட்டில் பூச்சியாய் மாண்டிட*
*விந்தை உலகில் நீ. பூக்கவில்லை*
*விண்ணவரும் மண்ணவரும் போற்றிடும்*
*விந்தைக் காவியமாய் பிரசவித்திடு!*

*இருண்ட மனங்கள் ஒளி பெற்றிடவும்*
*வரண்ட மண்ணில் வளம் கொழித்திடவும்*
*வன்முறைக்கும் வஞ்சகரின் வாழ்வுக்கும்*
*சாவு மணி அடிக்க எழுந்திடு!*

*நீதிக்காய் குரல் கொடுத்திடு!*
*நீதியாய் வாழ்ந்து காட்டு!*
*பிறர் நலனில் வள்ளலாள் வாழ்ந்திடு!*
*பிரிந்த உறவுகள் இணையப் பணிபுரிந்திடு!*
*அன்போடும் பண்போடும் மனிதம்*
*புதிதாய்ப் பிறந்திட....*
*புனித சரித்திரம் படைத்திடு!*

- எஸ்.எம்.இராஜேஸ்கனி,

## பெண்மையே... உயர்!

தரணி மீதிலே...
தாரகை போலவே....
தளராத உறுதியாய்
நின்றிடு தோழியே!

சுற்றங்கள் பேசட்டும்
உன்னையே போற்றட்டும்
உலகில் உயர்வான
பெண்ணாக வாழ்ந்திடு!

உண்மையைப் படை
தடையினை உடை
வருகின்ற கவலைக்கு
கொடு நீ விடை!

வெற்றியை உனதாக்கு
இருளினைப் பகலாக்கு
தாங்கிடும் சுமைகளை;
பலம் கொண்டு எளிதாக்கு!

தீபமாய் ஒளிர்!
வேதமாய் தளிர்!
அடிமையாய் வாழாமல்
பெண்மையே உயர்!
- இ.கோபிகா.

## இன்னும் எழுக நம் நங்கையரே...

*மாதவம் இயற்றியே*
*மாதராய்ப் பிறந்தவர்*
*மாண்பினைப் போற்றிடும்*
*மாபெரும் நாளிதில்*

*சோதனை தீர்த்திட*
*சேனையாய் வந்தெம்*
*சாதனை படைத்திட்ட - தமிழ்*
*பெண்களை வாழ்த்துவோம்.*

*களங்களில் ஆடிய*
*இளம்புலிப் பெண்கள் ஒருபுறம்*
*அண்ட வெளியிலும் ஆண்டுவந்திடும்*
*பெண்டிரின் சாதனை மறுபுறம்.*

*உலகம் உருண்டிட*
*உருளிகள் இரண்டாய்*
*ஆண்களும் பெண்களும்*
*வாழ்ந்திடல் நன்றென*

*உணர்ந்ததே உலகம்*
*வையகம் போற்றும் - தமிழ்*
*தையலார் பெருமை*
*தந்தது நம் பண்பாடே*

*நாகரிகம் என்றெண்ணி*
*அநாகரிகம் பற்றிடாது*
*அறிவுடன் இகத்தில்*
*ஆட்சி செலுத்துவீர்*

*மரபினைக் காத்து*
*மறத்தினைப் போற்றி - இன்னும்*
*எழுக நம் நங்கையரே!*

- செந்தூர்ராஜ்.



## விழிர்! எழு!! நிமிர்!!!

பெண்ணே விழித்தெழு!
அன்னியனுக்கு அடி கொடுத்த
அன்னையர் வாழ்ந்த நாடிது!
அகிம்சை முதல் உயிராயுதம்
வரை
உயிர் கொடுத்த
உத்தமிகள் வாழும் நாடிது!

நாம் படிதாண்டா காலம்
போகட்டும்!
விடியலை நோக்கி
விரைந்திடுவோம்!
அடிமை விலங்கை
தகர்த்திடுவோம்!

புதுமைகளைப் படைத்திட
எழுந்து வா!
வரும் வெற்றிகளை குவித்திட
நிமிர்ந்து வா!
வா.வித்தியா,
கிளிநொச்சி.

## விழித்துக் கொண்டது!

அடுப்புப் புகையில்
அமிழ்ந்து வேகி
வீட்டிற்குள்ளே
விட்டிலாகி
சீதனக் கொடுமையில்
சீரழிந்த பெண்மையின்று
தொலைந்துபோனது!

புதிய பெண்மை
புதியவேகம்
விதியைக்கூட
மதியால் மாற்று
மந்திர விவேகம்!

ராஜ்ஜியம் ஆளும்
ராணியுமாகி
விடுதலை தேடும்
வேங்கையுமாகி
புறப்பட்டெழும்
புதுக்கோலம்!

நினைத்தால் முடியும்
என்பதைக் காட்டும்
வினைதான் உள்ளது
இன்றைய பெண்களில்!

பெண்ணினம்
விழித்துக் கொண்டது
அதனால்
மனிதம் கூட
விடுதலை கண்டது.
- சூரிய நிலா



## உலகக் கிண்ணத்தை...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்னை தமது பயிற்றுநராக செயற்படுமாறு அழைத்தது. ஆனால், முழு நேரமாக இதில் ஈடுபடுவது குறித்து எனக்கு சந்தேகம் உள்ளது. எந்த வோர் அணியுடனும் ஆலோசகராக பணியாற்றுவதற்கு நான் விரும்புகிறேன்.

"இங்கிலாந்தின் வோர்க்ஷயர் பிராந்திய அணியிலும் பயிற்றுநராக கடமை ஆற்றிய வூல்மர் தற்போது ஐ.சி.சியின் அபிவிருத்தி அதிகாரியாக உள்ளார். நமீபியா, நெதர்லாந்து, கனடா, கென்யா முதலிய நாடுகளின் கிரிக்கெட் அபிவிருத்திப் பணிகள் இவரின் பொறுப்பில் உள்ளன.

இலங்கையுடனான போட்டி சம நிலையில் முடிவுற்றதால் தென்னாபிரிக்கா முதல்சுற்றுடன் வெளியேறியது. இதுகுறித்து வூல்மர் கருத்து தெரிவிக்கையில்:-

மழைபெய்தால் அதற்கு முகம் கொடுப்பதற்கான தயார் நிலையில் தென்னாபிரிக்கா இருக்கவில்லை.

வோர்க்ஷயரில் எமது உடை மாற்றும் அறையில் மழையின் நகர்வைக்காட்டும் ரேடர்கருவி பொருத்தப்பட்டிருக்கும்.

இதன்மூலம் மழையால் ஆட்டம் தடைபடுமா என்பதை அறிந்து கொள்ளலாம். சர்வதேச அணியொன்று வானிலை குறித்து அறிந்திருக்க வேண்டும் என்றார்.

## தரக்குறைவான...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால், குறித்த தொலைக்காட்சிகளில் இந்திய வீரர்கள் யாரும் பேட்டி அளிக்கக்கூடாது என்று முடிவு எடுத்து அதில் அனைவரும் ஓரணியில நிலையாக இருந்து வருகிறார்கள்.

இதற்கிடையில் 'சௌரவ் கங்குலியை 11பேர் அணியில் சேர்க்கக் கூடாது 14ஆவது வீரராக வைக்க வேண்டும்' என்று விமர்சித்த ஸ்ரீகாந், தற்போது பல்டியடித்துள்ளார். அவர் கங்குலியுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு "வேடிக்கையாகத்தான் கூறினேன். இதனைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவேண்டாம்" என்று வருத்தம் தெரிவித்தார்.

ஸ்ரீகாந்தின் காலம் கடந்த ஆறுதல் வார்த்தை கங்குலிக்கு திருப்தி அளிக்கவில்லை. தொலைக்காட்சி நிர்வாகியொருவர் கங்குலியை சமரசம் செய்ய மேற்கொண்ட முயற்சியும் பலிக்கவில்லை. இதனால் தொலைக்காட்சி நிறுவனங்கள், கங்குலி இடையேயோன மோதல் முற்றி நீடித்து வருகிறது.

தொலைக்காட்சி விவகாரத்தில் கங்குலிக்கு ஆதரவாக இந்திய அணி வீரர்கள் அனைவரும் உள்ளனர். பஞ்சாப்பைச் சேர்ந்த சித்து வருத்தம் எதுவும் தெரிவிக்கவில்லை.

## ஸிம்பாப்வே அணிக்கு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுடனும் அபாரமாக விளையாடி சுப்பர் சிக்ஸுற்கு நுழைந்தது.

அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஆஸ்லே, பிளமிங் மற்றும் மக்மிலன் டெரிஸ் போன்றோர் ஆரம்பத்தில் திணறியபோதும் பின்னர் தம்மை ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு நன்றாகவே ஆடி தமது அணியின் வெற்றிக்கு கைகொடுத்து வருகின்றனர்.

இதேவேளை, தென்னாபிரிக்காவின் ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானவை. ஆனால், இவ்விரு அணிகளும் மிகத் திறமையான வேகப்பந்து வீச்சாளர்களை பெரிதாக கொண்டிருக்கவில்லை. இதனால் பந்துவீச்சில் இரு அணிகளும் சமபலம் கொண்டவையாக விளங்குகின்றன.

ஸிம்பாப்வே அணியைப் பொறுத்தவரை அவ்வணி சுப்பர் சிக்ஸிக்கு வரும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. இப்பிரிவில் இறுதிவரை இங்கிலாந்து அணியே அந்த சந்தர்ப்பத்தை தக்கவைத்திருந்தது. ஆனால். வர்ணபகவான் ஸிம்பாப்வேயிற்கு கை கொடுத்தார். இதனால் அனைவருக்கும் அதிர்ச்சி கொடுக்கும் வகையில் 'சுப்பர் சிக்ஸுக்கு' அது வந்தது.

பாகிஸ்தான் அணியுடன் நடந்த ஆட்டத்தில் பாகிஸ்தானே வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஓட்ட எண்ணிக்கை அவ்வாறு இருந்தது.

ஆனால், அந்தக் கட்டத்தில்தான் வர்ணபகவான் பாகிஸ்தானுக்கு சதி செய்து ஸிம்பாப்வேக்கு கைகொடுத்தார். இந்த வகையில் வர்ணபகவானுக்கே ஸிம்பாப்வே நன்றி செலுத்த வேண்டும்.

ஸிம்பாப்வே அணியைப் பொறுத்தவரை துடுப்பாட்டம், பந்து வீச்சு ஆகியவற்றில் பெரிதாக எதனையும் அது சாதிக்கவில்லை. ஒரு சில ஆட்டங்களைத் தவிர ஏனையவற்றில் துடுப்பாட்டம் வெறும் மந்தமாகவே காணப்பட்டது. இவற்றை சீர் செய்ய வேண்டியது வெற்றிக்கு மிக அவசியம்.

இதுவரை இவ்விரு அணிகளும் 25 ஒரு நாள் ஆட்டங்களில் மோதியுள்ளன. அவற்றில் 16இல் நியூஸிலாந்தும் 7இல் ஸிம்பாப்வேயும் வெற்றிபெற்றுள்ளன. ஒரு போட்டி சம நிலையிலும் மற்றொரு போட்டி வெற்றி தோல்வியின்றியும் முடிவடைந்தன. இறுதியாக நடைபெற்ற 5 ஆட்டங்களில் 3 தடவைகள் ஸிம்பாப்வேயும், நியூஸிலாந்து 2 தடவைகளும் வெற்றிபெற்றன.

இதேவேளை -

பொது மைதானங்களில் நடைபெற்ற 5 ஆட்டங்களில் 4போட்டியில் நியூஸிலாந்து வெற்றிபெற்றது. ஒரு போட்டி வெற்றிதோல்வி இன்றி முடிவடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**- வசந்தன்.**

---

### யா/இந்து மகளிர் கல்லூரி
### பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
### வருடாந்த பொதுக் கூட்டம்

இடம் : கல்லூரி பிரதான மண்டபம்.
காலம் : 16.03.2003 ஞாயிறு மு.ப. 10.00 மணி.

மேற்படி பொதுக் கூட்டத்தில் பெற்றோர்கள் தவறாது கலந்து கொண்டு, பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

திருமதி ச.ஜெயராஜா (அதிபர்) *தலைவர்* — திரு. க.பாலச்சந்திரன் *செயலாளர்*

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
(15338) யா/இந்து மகளிர் கல்லூரி.

---

### கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய முதல்வர்
*திரு. செ.பேரின்பநாதனின்*
பாசமிகு தந்தையார்
**நாகமுத்து செல்லத்துரை** அவர்கள்

இயற்கை எய்தியமையால், பிரிவுத் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு ஆறுதல் கூறுவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

உப அதிபர், ஆசிரியர்கள்,
யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம். (15369) ஊழியர்கள்.

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 27 - 07 - 1948



இறப்பு 17 - 02 - 2002

**திருமதி எள்ளுப்பிள்ளை கோவிந்து**

"நினைவோடு வாழுகின்றேன் - உனை
தினம் எண்ணி ஏங்குகின்றேன்."

ச.ஜனார்த்தனன் (பேரன்)

தற்காலிக முகவரி:
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (15356)

நிரந்தர முகவரி: பலாலி தெற்கு,
வசாவிளான்.

---

### 33 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் சுப்பையா பாலசிங்கம்**

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவுகள் இருந்துமென்ன?
பிறக்கும்போது இறப்பும் நிர்ணயிக்கப்படுவது நியதி
விதியாரைத்தான் விட்டது எம்முன்னே இல்லாதபோது
வந்த தங்கள் மரணம் எம்
வேதனையை அதிகரிக்கச்செய்ததே அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

*முருகன் வெதுப்பகம்*
*துணைவிச் சந்தி,*
*சங்கரத்தை, வட்டுக்கோட்டை.* (15353)

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

### வீடு உடன் விற்பனைக்குண்டு

வண்ணார்பண்ணை மேற்கு, 87, பழைய வீதி, ஆறுகால்மடம் என்னும் முகவரியில் உள்ள 7 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

**கந்தையா விஜயன்,**
பழைய வீதி, ஆறுகால்மடம்,
(15370) வண்.வடமேற்கு.

---

### தேவை

வெல்டிங் வேலை அனுபவம் உள்ளவர்கள் தேவை.

சம்பளம்:
3,500 - 6,000வரை

விபரங்களுக்கு :
**யசோ**
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(15366) 0777-110610

---

### தேவை

தனியார் கம்பனியொன்றின் பொருட்களை சைக்கிளில் கொண்டு சென்று விற்பனை செய்வதில் ஆர்வமுடையவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

உழைப்பிற்கும், ஈடுபாட்டிற்கும் ஏற்ப கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும். (கல்வித்தகைமை. வயதெல்லை எதிர்பார்க்கப்படமாட்டாது).

ஆர்வமுடையவர்கள் மாத்திரம் தம்மைப் பற்றிய முழு விபரங்களையும் 07 நாள்களினுள் அனுப்பிவைக்கவும்.

*தொடர்பு:* மே/பா. 1816
உதயன்,
யாழ்ப்பாணம். (15357)

---

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள
பவுண் கம்பி
இழுக்கும் இயந்திரம்
(அளவு 8 அங்குலம்)
விற்பனைக்குண்டு.

*தொடர்பு:-*

**இராஜன் எலெக்ரிக்கல்ஸ்**
மெயின் வீதி,
பருத்தித்துறை. (15354)

---

### யாழ்நகரில் வீடு வாடகைக்குத் தேவை

யாழ்நகரில் 3 படுக்கை அறைகொண்ட வீடு மொசம்பிக் நாட்டின் கண்ணிவெடி அகற்றும் பிரிவிற்கு உடனடியாகத்தேவை.

அத்தோடு 4 - 5 படுக்கை அறை உள்ள மற்றுமொரு வீடு தேவை. உடனடியாகத் தொடர்புகொள்ளவும்

தொலைபேசி: 222-2347
முகவரி: இல. 100, பிரதான வீதி,
(15349) யாழ்ப்பாணம்.

---

### கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 07 - 12 - 1918



இறப்பு 03 - 03 - 2003

**அமரர் சின்னத்துரை செல்வராசா**
*(கனடா)*

**திருமதி கமலேஸ்வரி அவர்களின்**

பாசமிகு தந்தையார் சின்னத்துரை செல்வராசா கனடாவில் காலமானதையிட்டு ஆழ்ந்த துயரடைவதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து இன்று கனடாவில் நடைபெறும் அவரின் இறுதிக் கிரியைகளில் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

*பிள்ளையார் வீதி,*
*பத்தைமேனி,*
*அச்சுவேலி.*
*T.P. 0777 554962*

தகவல்:
**சி.பாலசுப்பிரமணியம்**
(மருமகன் - ஜி.வி.ரி. கல்லுடைக்கும் ஆலை)
கிந்துகிட்டி, சுன்னாகம் வீதி, புத்தூர்.
உரிமையாளர்களும், ஊழியர்களும். (15365)

---

### மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் துரைச்சாமி**

***(கிளிநொச்சி, 8ஆம் வாய்க்கால், புளியடி கமக்காரன்)***

மட்டுவிலை பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் துரைச்சாமி அவர்கள் நேற்று (07.03.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, ராமலிங்கம் ஆகியோரின் மூத்த சகோதரரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நடேசராசா லட்சுமி மற்றும் பரஞ்சோதி (கனடா), மகேஸ்வரி (சுவிஸ்), தனபாலசிங்கம் (கைதடி), நடராசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வடிவேலு (கனடா), விக்னேஸ்வரன் (சுவிஸ்), யோகேஸ்வரி, சுகிர்தா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பகீரதன் (சுவிஸ்), பரிமளச்செல்வி (கனடா), பரமேஸ்வரன் (சுவிஸ்), பகீரதி (கனடா), தர்மசேனன் (கனடா), வளர்மதி, வினோதினி, அருந்தவன் (சுவிஸ்), அனோஜா (மாணவி, இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்), தரிஜா (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), அபிராஜினி (மாணவி, கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம்), மிதுனா, மதுஷன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் சுதர்சன், சாருகா, பிருத்துவி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2003) சனிக்கிழமை பி.ப. 1மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊத்தல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி வடக்கு,*
*கைதடி.*

தகவல்:
(15346) த.தனபாலசிங்கம் (மகன்)

---


### அரச ஊழியர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

18,24,36 மாதாந்த கட்டணத்தில்
அதிநவீன PENTIUM 4 கணனி + 600VA UPS
பெறுமதி ரூ 65,000/- மட்டுமே !

இத்திட்டம் முதல் 100 வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே



மேலதிக விபரங்களுக்கு

**MICRO PC SYSTEMS**

யாழ்ப்பாணம் 175/8, Kasthuriyar Road, Jaffna. Tel : 0777-306417
வெள்ளவத்தை 15, 36th Lane, Colombo 6. Tel : 074-510764, 074-513295
கொட்டாஞ்சேனை 82, New Chetty Street, Co.-13. Tel : 074-619673, 074-613517

## ஒன்றுகூடல்

கைதடி,மார்ச்8

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று சனிக்கிழமை உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-75)

## மனித உரிமைகள் குறித்து இன்று கலந்துரையாடல்

காரைநகர்,மார்ச்8

மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9.00மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஐரோப்பிய ஆணைக்குழுவின் அனுசரணையுடன் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு இதனை ஏற்பாடு செய்துள்ளது. அனைவருக்கும் மனித உரிமைகள் - சமாதான முறை வழியில் சிறுபான்மையினரின் உரிமைகள் எனும் செயற்திட்டத்தின்கீழ் இக்கலந்துரையாடல் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. (எ-73)

## பரிசளிப்பு விழா

வலிகாமம்தெற்கு,மார்ச்8

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 21ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற உள்ள மேற்படி விழாவுக்கு மகளிர் இல்லத் தலைவி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை வகிப்பார். யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீட தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி.பசுபதிப்பிள்ளை கலந்து கொள்வார்.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், சிவஸ்ரீ வ.அகிலேஸ்வரக்குருக்கள், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் பொ.சுந்தரலிங்கம் ஆகியோரின் ஆசியுரைகளும் இடம்பெறும். (ம-152-86)

## இலவச கண்சிகிச்சை முகாம்

வலிகாமம் தெற்கு,மார்ச்8

இணுவில் கந்தசுவாமி கோயில் இளம் தொண்டர் சபை மண்டபத்தில நாளை ஞாயிற்றுக்கிழமை காலை முதல் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளது.

இணுவில் வயன்ஸ் கழகத்தினர் இம் மருத்துவ முகாமுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கஷ்டப்பட்ட மக்களின் நலன் கருதி கண்பார்வை பாதிக்கப்பட்டோர் இங்கு பரிசோதிக்கப்படவுள்ளனர். மேலதிக சத்திர சிகிச்சைக்காக அவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு இப்பரிசோதனை முகாம் மூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் ச.குகதாசன் கண்பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளார். (ம-152)

## கட்டுரைப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்,8

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள ஆணைக்குழுவும், ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்றிட்ட பிராந்திய நிலையமும் இணைந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மாணவர்களுக்கென நடத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மூன்று பிரிவுகளாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயா விவரம் பிரிவு ரீதியாக முறையே வருமாறு:-

*ஆரம்பப் பிரிவு:* த.நிதர்சன், பா. நிந்தா, த.டேனிக்கா.

*இடைநிலைப் பிரிவு:* பூ.திருவருட்செல்வி, ந.சஞ்சிகா, பே.வித்தியா.

*மேற் பிரிவு:* செ.விஜித்திரா, பூ. திருவருட்செல்வன், பே.சாதனா பேபி.

இவர்களுக்கான பரிசில்கள் இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள மகளிர்தின விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன. (எ-10)

# மத்திய மாகாண சபையில் மாத்தளை உறுப்பினர் ரோகன மறியல் போராட்டம்

## ஆசிரியர் இடமாற்றத்தில் அரசியல் என முறைப்பாடு

கண்டி,மார்ச்8

மத்திய மாகாணசபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொழுது மாத்தளை மாவட்ட உறுப்பினர் ரோகன பண்டார (ஐ.தே.க.) சபை நடுவே அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்.

மாகாண அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரிய இடமாற்றங்களில் அரசியல் புகுந்துவிட்டதற்கும் கல்விப் பணிமனையில் தான் கௌரவக்குறைவாக நடத்தப்பட்டதற்கும் ஆட்சேபம் தெரிவித்தே அவர் இப்போராட்டத்தை மேற்கொண்டார்.

மாகாணசபைக்கூட்டம் தலைவர் பீற்றர் கங்கா கெதர தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது உரையாற்றிய உறுப்பினர் ரோகன பண்டார, மாகாண கல்விப் பணிமனைக்கு தான் சென்றபோது பலமணிநேரம் கால்கடுக்க நிற்க வைக்கப்பட்டதாகவும் அங்கு பணிபுரியும் 'பியோன்', கல்விப் பணிப்பாளர் போன்று தன்னுடன் நடந்துகொண்டதாகவும் முறையிட்டார்.

லக்கல தொகுதியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதையும் இடமாற்ற மேன்முறையீடு சபைக்குள் அரசியல் புகுந்துவிட்டதையும் சுட்டிக்காட்டிய அவர், தனது முறைப்பாடு குறித்து கல்வியமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் உரிய பதிலைத் தரவேண்டும் என்று கூறி சபை நடுவில் சுமார் 10நிமிடம் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார். சபைத்தலைவர் அவரை எழுந்துவிடுமாறு பணித்தபோதும் அவர் அசையவில்லை.

அதையடுத்து அமைச்சர் இராதாகிருஷ்ணன் பதிலளிக்கையில், இடமாற்றம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் கண்டி, மாத்தளை, தெனுவர, வத்தேகம, கட்டுகஸ்தோட்டை ஆகிய கல்வி வலயங்களில் ஆயிரத்து 438 ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார். 10வருடங்களுக்கு மேலாக ஒரே பாடசாலையில் கடமை புரியும் ஆசிரியர்களை மாற்றியே ஆகவேண்டும் எனவும் கூறினார்.

இதனையடுத்து அந்த உறுப்பினர் இருந்த இடத்தில் இருந்து எழுந்து சபை ஆசனத்தில் போய் அமர்ந்தார்.

இது இவ்வாறிருக்க, மத்திய மாகாணத்தில் இவ்வருட இறுதிக்குள் சுமார் 150 பாடசாலைகள் மூடப்படக்கூடியநிலை இருப்பதாகவும் கிராமப்புற பாடசாலை மாணவர்கள் நகரப்புறப் பாடசாலைகளுக்கு படையெடுப்பதால் மலையக தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படும் ஆபத்து இருப்பதாகவும் முதலமைச்சர் டபிள்யூ.பீ.பி. திஸாநாயக்க சபையில் தெரிவித்தார்.

சபை மீண்டும் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம)

# தனியான உதவி அரச அதிபர் பிரிவாக காரைநகர் பிரகடனம்

## அலுவலகத்தைத் திறக்க செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்8

காரைநகர் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாக பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து அலுவலகத்தை மிகவிரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என யாழ்.செயலக அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

காரைநகர் சைவ மகாசபைக் கட்டடத்தில் மேற்படி அலுவலகத்தை இயங்கச் செய்யும் வகையில் கட்டடப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும்-

உதவி அரசாங்க அதிபர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் நியமனங்கள் குறித்து தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் -

அடுத்த வாரமளவில் இவர்கள் பற்றிய பெயர் விவரங்கள் வெளியிடப்படும் என்றும்- அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில்-

இந்த விவகாரங்கள் குறித்து இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காரைநகர் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்துசமய விவகார அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் மேற்கொண்ட நடவடிக்கையினால் காரைநகர் ஒரு தனி உதவி அரசாங்கப் பிரிவாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் காரைநகர் ஒரு தனி உதவி அரசாங்கப் பிரிவாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய அரசாங்க அலுவலகத்தை உடனடியாக இயங்கவைக்குமாறு யாழ்.அரசாங்க அதிபருக்கு வடக்கு - கிழக்கு மாகாண சபைகளின் தலைமைச் செயலாளரின் ஊடாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

காரைநகரை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கு பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் அடங்கிய 5வருட திட்டமொன்றை அமைச்சர் மகேஸ்வரன் தயாரித்து வருகின்றார். இத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு தனியான உதவி அரசாங்கப் பிரிவு அவசியமாக உள்ளது - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# வித்தியாதானத்தில் வித்தகராகிய வித்துவான் மு.விருத்தாசலம்

'உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு' என்பதைத் தமது தாரக மந்திரமாகக் கொண்டு புனிதமான விடுதலைப் போர் என்கின்ற யாக வேள்வியிலே தமது இன்னுயிரை ஆகுதியாக்கிவிட்ட தமிழ்த் தவப் புதல்வர்களின் மேலான தியாகத்தினால் எமது தமிழ் அன்னை அரியணையில் ஏறுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் காலமிது.

ஆனால், இற்றைக்குப் பல தசாப்தங்களுக்கு முன்பு உயர்கல்வித்

### நீத்தார் நயப்புரை

துறையில் எமது உயிரினும் மேலான தமிழ்மொழி எடுப்பார் கைப்பிள்ளையாக அநாதரவான நிலையில் கைவிடப்பட்ட கறைபடிந்த வரலாற்றை ஈழத்தமிழ்ச் சமூகம் என்றும் மறந்துவிடமுடியாது. அன்று கறுப்புத்தோல் போர்த்த வெள்ளைக்காரர்களாகவே தமிழ் அன்னையின் புதல்வர்கள் பலர் நாடகமாடினர். உயர் கல்வித் துறையில் தமிழைப் படிப்பதும். தமிழின் சிறப்பை ஆராய்வதும் அவமானமாகக் கருதப்பட்ட அக்காலத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய மிகச் சிலரே உயர் கல்வித்துறையில் தமிழை ஆராய்ந்து தமிழ் அன்னையின் புகழை உலக அரங்கிற்கு கொண்டு வருவதற்கு அடிகோலினர். அவர்களில் ஒருவர்தான் கடந்த ஜனவரி மாதம் 9ஆம் திகதி வியாழக்கிழமை இவ்வுலகை நீத்த அமரர் வித்துவான் மு.விருத்தாசலம் அவர்கள்.

பரந்த அறிவுக்கு ஏற்ற விரிந்த நெற்றி. விரிந்த நெற்றி முழுவதும் வீபூதிக்குறி, கள்ளமில்லா வெள்ளை மனதைப் பிரதிபலிக்கின்ற வெள்ளைக் கதர் வேட்டி, தமிழ் அன்னையின் தவப்புதல்வன் என்பதை ஞாபகப்படுத்தும் வெள்ளை நஷனல் ஷேட், கட்டையான தோற்றம், கம்பீரமான நடை, கையிலே பிரம்பு இவைதான் அன்றைய ஆறுமுக வித்தியாசாலை அதிபர் அமரர் வித்துவான் மு.விருத்தாசலத்தின் ஆளடையாளங்கள்.

பண்டத்தரிப்புச் சாந்தைக் கிராமத்தில் முருகேசு விசாலாட்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனாக அவதரித்த விருத்தாசலம் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி ஆகியவற்றில் கற்ற பின் பேராதனைப் பல்கலைக்கழக கலைமாணிப் பரீட்சையில் சித்தியடைந்து கலைப்பட்டதாரியானார்.

அத்துடன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 'வித்துவான்' பரீட்சையிலும் சித்தியடைந்து தமது பெயருடன் 'வித்துவான்' என்ற பட்டத்தையும் இணைத்துக்கொண்டார்.

தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் தமது இரு கண்களெனப் போற்றியவர்.

**சிவனேசராசன்**

அன்று அன்னியராட்சிக் காலத்தில் எம்மவர்களின் ஆங்கில மோகம் காரணமாக அநாதரவான நிலையில் இருந்த எமது தமிழ் மொழியை அரவணைத்த தமிழறிஞர்களான பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, பேராசிரியர் சு.வித்தியானந்தன் போன்ற கல்விமான்களின் வரிசையில் மு. விருத்தாசலமும் ஒருவர் என்பதை தமிழ்க் கல்வியுலகம் என்றும் மறவாது. ★

## நியந்த்ரீ அமைப்பின் கூட்டம்

வலி.தெற்கு,மார்ச்8

நியந்த்ரீ அமைப்பின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் சிவன்கோயில் மண்டபத்தில் அதன் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும். புதிய செயற்பாட்டுக் குழுத் தெரிவும் அன்றையதினம் இடம்பெறும். (ம-152)

# பாவங்களை மறப்போம்

*"நோயற்றவர்க்கு அல்ல நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல பாவிகளையே மனம்மாற அழைக்க வந்தேன்"* - லூக்-5-27-32.

இந்த உலகில் வாழும் பலர் ஆரம்பத்தில் அறியாமையினாலேயே தவறு விடுகிறார்கள். அவர் விடும் பிழையை - தவறைச் சுட்டிக் காட்டி மீண்டும் அதனை அவர் செய்யாமல் விடுமாறு நல்வழிப்படுத்தவேண்டியது நமது கடமையாகும்.

அதனை விடுத்து, அவரது

### தவக்காலச் சிந்தனை - நான்காம் நாள் -

பிழையை வெளியுலகிற்கு கூறி அவரைப் பாவம் செய்தவர், பிழை விட்டவர் எனத் தூற்றித்திரிவது நல்லதல்ல. தமது பிழைகளை, தவறுகளை மறைத்து வாழ்பவர்களே மற்றவர்களது பிழைகளை, தவறை வெளியுலகிற்கு எடுத்துச்சொல்கிறார்கள்.

எமது பிழையை - தவறை மறைத்து மற்றவர்களைத் தீர்ப்பிட நாம் யார்? எமது பிழைகளை உணர்ந்து எமது வழியை நல்வழிப்படுத்தி வாழவேண்டியது அவசியமாகும்.

இவனைப் பாவி என்றும், இவன் பிழைவிட்டுவிட்டான் என்றும் குற்றம் கண்டு அவனை ஒதுக்குவதனால் பிழைவிட்டவனை - பாவம் செய்தவனை நல்வழிப்படுத்த நாம் தவறி விடுகிறோம்.

மனிதன் பலவீனமுடையவன். தவறு தீர்ப்பில் பிழைவிடுவதும் இயல்பு. நீதிபதி கூட தனது தீர்ப்பில் பிழைவிடலாம்.

**ம.ஞானசீலன்**

அதற்காக நாம் பாவத்திலேயே வாழப்பழகி விடக்கூடாது. பிழைகள் தொடர்வதும் பாவம் செய்வதும் எமது மனதில் வளர்வதும் எம்மை தவறான மீளமுடியாத பாதைக்கே இட்டுச் செல்லும்; சமுதாயம் எம்மை ஒதுக்கும். நாம் எவருக்கும் பயந்து வாழவேண்டிய சூழலை உருவாக்கும்.

யேசுவின் திருப்பாடுகளை நினைவுகூரும் இந்நாள்களில் நாம் பாவம் செய்வதை - தவறு செய்வதை - மறந்து நற்பிரஜையாக வாழ முயற்சிப்போம்.

## சாவகச்சேரி நகருக்கு அடுத்த வாரம் மின்சாரம்

தென்மராட்சி,மார்ச்8

சாவகச்சேரி நகர்ப் பகுதிக்கு அடுத்த வாரம் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஜெனரேற்றர் இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளது. இந்த ஜெனரேட்டர் முன்னர் பிரதேச செயலகம் அமைந்திருந்த கட்டடத்தில் தற்காலிகமாக வைக்கப்பட்டு மின்விநியோகம் வழங்கப்படவுள்ளதாகவும் -

முதற்கட்டமாக சங்கத்தானையிலிருந்து சாவகச்சேரி நகர் வரையுள்ள அரச அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், வான் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரான கோண்டாவிலைச் சேர்ந்த கார்த்திகேசு சிவபாதம் (வயது40) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

முன்னால் சென்றுகொண்டிருந்த வானின் பின்னால் வேகமாகச் சென்று மோதியே விபத்து நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-15)

## ஆய்வுப் பட்டறை

யாழ்ப்பாணம்,மார்ச்8

'பேர்க்கொவ்' பவுண்டேசன் ஆதரவில் பண்டத்தரிப்பு தியான மண்டபத்தில் 'சுயநிர்ணயமும் அதிகாரப் பகிர்வும்' எனும் தலைப்பிலான இருநாள் ஆய்வுப்பட்டறை இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பாகவுள்ளது.

நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக் குழுவின் தலைவர் வண. பிதா ஏ.ஐ.பேர்ணாட் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஆய்வுப்பட்டறையில் ஹொங்கொங் பல்கலைக்கழக பேராசிரியர் யாஷ்கய் மற்றும் 'சுயநிர்ணய உரிமையும் இலங்கைத் தமிழ் தேசிய விவகாரமும்' எனும் நூலின் ஆசிரியையான கலாநிதி ஹெலனாவோல் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ம-10)

## நாட்டுக்கூத்து மேடையேற்றம்

இளவாலை,மார்ச்8

இளவாலை திருமறைக் கலாமன்றம் மற்றும் யங்ஹென்றீஸியன் ஆகியவற்றின் வளர்ச்சி நிதிக்காக யாழ். திருமறைக் கலாமன்றத்தின் 'கம்பன் மகன்' நாட்டுக்கூத்து இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மேடையேற்றப்படும். (ஐ-48)

## கலாசார அலுவலருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சகல கலாசார உத்தியோகத்தர்களையும் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செயலகத்தின் புனர்வாழ்வுப் பகுதிக்குத் தவறாது சமுகந்தருமாறு அரச அதிபர் செ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 11ஆம் திகதி முதல் குடாநாட்டில் இடம்பெறவுள்ள கலை நிகழ்வுகள் குறித்து கலந்துரையாடுவதற்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## நூலகங்களின் கடமை நேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்8

நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும் கொக்குவில், கோண்டாவில் மற்றும் நல்லூர் ஆகிய இடங்களில் உள்ள நூலகங்களின் கடமை நேரம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இதுவரை காலமும தினமும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை இயங்கிய மேற்படி நூலகங்கள் இனிமேல் இரவு 7 மணிவரை திறக்கப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Kotmale

## பால் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான

**விற்பனைப் பிரதிநிதி தேவை**

பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்தோர் தங்கள் சுயவிபரக்கோவை மற்றும் சான்றிதழ்களுடன் நாளை (09.03.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00மணி முதல 4.00 மணிவரை நடைபெறும் நேர்முகப் பரீட்சையில் சமுகமளிக்கவும்.

தகைமைகள்:-

* க.பொ.த. (சா/த) சித்தியுடன் ... பாடத்திலும் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.
* ஆங்கிலத்தில் பேச்சுத்திற... விரும்பத்தக்கது.
* பால் உற்பத்திப் ... விற்பனை செய்வதில் முன் அனுபவம் இருப்பின மேலதிக தகை...ாகக் கணிக்கப்படும்.

மு... : **S.N.T.FARM SHOP**
யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.
(மானிப்பாய் மகளிர் கல்லூரியருகில்)

(15328)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை இராமலிங்கம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராமலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (06.03.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் சிவஞான சுந்தரி, நாகரத்தினம், ஜீவானந்தம், இந்திரானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கந்தையா, பொன்னம்மா, சங்கரப்பிள்ளை, மாணிக்கம் மற்றும் தங்கம்மா, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பூரணம், நாகலிங்கம், செல்லமுத்து, சின்னத்துரை, பூபாலசிங்கம் மற்றும் கனகம்மா ஆகியோரின் மைத்துனரும் ஸ்ரீதரசிங், இராஜன், பூபாலசிங்கம் (பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2003) சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*No.20, விவேகானந்தா வீதி,*
*வெள்ளவத்தை, கொழும்பு.* (C/26845)

தகவல்:
பூ.ஸ்ரீதரசிங் (மருமகன்).

## பதிவுகளை மேற்கொள்ள வசதி

நெல்லியடி மகாவித்தியாலய வீதியில் கடந்த முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ள திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்தில் திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் வீடியோ விநியோகத்தர்கள் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## தவறிவிட்டது

எனது (936) நம்பர் SAGEM எனும் கைத்தொலைபேசி கொக்குவில் மேற்கிலிருந்து குளப்பிட்டிச் சந்திவரை உள்ள பிரதான வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**பிறேம் நகைமாடம்**
மானிப்பாய்
T.P: 3178 (15343)

## முகாமையாளர் தேவை

பால் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தும் நிறுவனத்திற்கு முகாமையாளர் தேவை.

நேர்முகத்தேர்வு:
ஞாயிற்றுக்கிழமை (09.03.2003)
காலை 9.00 - 11.00 மணிவரை

முகவரி :
**S.N.T. FARM SHOP**
யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய்.
(மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில்) (15329)

## தவறிவிட்டது

04.03.2003 (செவ்வாய்) அன்று காலை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சமூகம் தந்தவர்கள் தயவுசெய்து தங்கள் வாகன ஆவணங்களைச் சரிபார்த்து தவறுதலாகக் கையளிக்கப்பட்ட 113 SRI 5163 மோட்டார் சைக்கிள் பதிவுப் பத்திரத்தைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலோ அல்லது தம்பையா விஜயரட்ணம், 'வசந்தவிலா' கோண்டாவில் மேற்கு, கோண்டாவில என்ற விலாசத்திலோ கையளிக்குமாறு தயவுடன் வேண்டுகிறேன்.

T.P.NO: 222 - 3178 (15347)

இளவாலை

திருமறைக்கலாமன்றம், யங்கென்றீசியன் வளர்ச்சி நிதிக்காக யாழ்.திருமறைக்கலாமன்றம் பெருமையுடன் வழங்கும்

*அம்பிகாபதி, அமராவதி காதல் காவியத்தை* எடுத்தியம்பும்

**கம்பன் மகன்**

நாட்டுக்கூத்து

இடம்: இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானம்
காலம்: இன்று [08.03.2003] சனிக்கிழமை பி.ப. 7.00 மணி
பிரவேசம் : 20 ரூபா (C/26839)

## துயர்பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியரான திருமதி **ந.புஸ்பரட்ணம்** அவர்களின் அன்புத் தந்தையார்

**பா.கார்த்திகேசு**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு துயருறும் குடும்பத்தினரோடு நாமும் துயர்பகிர்வதோடு, அன்னாரன் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை வேண்டுகின்றோம்.

*மணிக்கூட்டு வீதி,யாழ்ப்பாணம்.* (15345)

பாடசாலை ஆசிரியர் கழகம்
யா/சன்மார்க்க ம.வி.



மங்கையரின் மாண்புக்கோர் மணிமகுடம்

பாரெங்கிலும் பாரிய பங்கு வகிக்கும் பெண்குலத்தின் பெருமைக்கு இன்றைய சர்வதேச மகளிர் தினம் காணிக்கையாகிறது. தேசிய சேமிப்பு வங்கியினராகிய நாமும் 18 மற்றும் அதற்கும் கூடிய வயது மகளிருக்குமான விசேஷ சேமிப்புக்கணக்கான ஸ்திரி மூலமாக தமக்கென ஒரு வாழ்க்கைப் பாங்கையும் பாதுகாப்பான எதிர்காலத்தையும் உறுதிசெய்ய அவர்களுக்குக் கைகொடுப்பதில் பெருமையடைகிறோம்.

ஸ்திரி

NSB

LOWE LDB

# கொழும்பு மற்றும் யாழ் நகருக்கு பயணம் செய்வோருக்கு ஓர் அரிய வாய்ப்பு

உங்கள் பயணத்தின் நடுவழியில் அறுசுவை உணவு அருந்தவும், அலுப்பை போக்கவும் எழில் பொங்கும் சூழலில் இதோ இரண்டு விடுதிகள்.



**மிஹிந்தலை விருந்தினர் வீடு**
தொ.பே : 025-66599

* உங்களின் ரசனைக்கேற்ற சுவைமிக்க உணவு வகைகள்
* இளைப்பாறவும், பொழுதுபோக்கவும் சௌகரியமான அறைகள்
* சினேகபூர்வமான உபசரணை, விருந்தோம்பல்
* சகலதும் நியாயமான விலைகளில்
* மிஹிந்தலை விருந்தினர் வீடு அறைகள் முற்றிலும் குளிரூட்டப்பட்டது
* ரம்மியமான அலங்காரங்கள்



**மதவாச்சி விருந்தினர் வீடு**
தொ.பே : 025-45699

முன்பதிவுகளுக்கு தொடர்புகொள்க:

**பயண துறையரங்கம், இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனம்**

411, காலி வீதி, கொழும்பு 04. தொலைபேசி : 504959, 503497, 503558
பெக்ஸ் : 503504 ஈ-மெயில் : chc@sltnet.lk இணைய தளம் : www.ceylonhotels.lk

Twin

# புலிகள் என்னிடம் கப்பம் கோரினரென வெளியான செய்தி உண்மைக்கு முரண்

## அமைச்சர் மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் அறிக்கை

கொழும்பு,மார்ச்8

புலிகள் என்னிடம் ஐந்தரைக்கோடி ரூபா கப்பம் கோரவில்லை நான் கப்பம் செலுத்தவும் இல்லை கடந்த 5 ஆம் திகதி ஓர் ஆங்கில நாளிதழ் புலிகள் என்னிடம் ஐந்தரைக்கோடி ரூபாவைக் கப்பமாக கோரியிருப்பதாக செய்தி வெளியிட்டுள்ளது. இது உண்மைக்கு முரணானது என்று அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட அறிக்கை ஒன்றை விடுத்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

நான் கடந்த 26 மாதங்களாக யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகின்றேன். கடந்த 14 மாதங்களாக யுத்தநிறுத்தத்தை இரு தரப்பினரும் கடைப்பிடிக்கின்றனர். அதற்கு முன்னர் 12 மாத காலத்திலும் நான் பல முறை யாழ்ப்பாணம் சென்று வந்துள்ளேன்.

சம்பந்தப்பட்ட பத்திரிகை தொடர்ந்தும் எனது கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் செய்திகளை வெளியிட்டு வருகிறது.

சமாதானத்துக்கு எதிரான செய்திகளை இப்பத்திரிகை தொடர்ந்தும் வெளியிட்டு வருகிறது.

எனது இந்த மறுப்பையும் அச்செய்திக்கு வழங்கியது போல் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்குமாறு அந்நிறுவனத்தைக் கேட்டுக் கொள்கின்றேன்.

- இவ்வாறு அமைச்சர் மகேஸ்வரன் கூறினார்.

(ஐ)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்8

வரணி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் என்.நவரத்தினராசா தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக ஜீ.ரீ.சற் நிறுவன யாழ்ப்பாண இணைப்பாளர் ஜீ.ஆர்.இராசசிங்கம் கலந்து கொள்வார். (ஒ-5,170)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்8

கட்டைவேலி யார்கரு விநாயக வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வ.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக இப்பாடசாலையின் ஸ்தாபகரும், யாழ்.பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் வ. சிவராசசிங்கம் கலந்து கொள்வார். (ஒ-5,173)

☆ ☆ ☆

குருநகர்,மார்ச்8

யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்ப பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(ம-51)

☆ ☆ ☆

கைதடி,மார்ச்8

தென்மராட்சிப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கழகங்களுக்கிடையேயான 'செற்றப்' முறையிலான கரபந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. இப்போட்டியில் பதினைந்திற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றுகின்றன. (ஒ-75)

☆ ☆ ☆

தென்மராட்சி,மார்ச்8

தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ-117)

☆ ☆ ☆

அராலி,மார்ச்8

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் பு.விகனேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் மானிப்பாய்க் கிளை முகாமையாளர் தா.திவராஜா கலந்து கொள்வார். (ஐ-6)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலையின் மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அதிபர் திருமதி த.அ.துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ)

## திருமறை கலாமன்ற மகளிர் அவையின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ்.திருமறைக் கலாமன்ற மகளிர் அவையினர் நடத்தும் மகளிர் தினக் கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த ஜெயரஞ்சினி கலந்து கொண்டு கருத்துரை வளங்கவுள்ளார். (ஒ-9)

## 6புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறியலில் வைக்கப்படுவோருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றமே பிணை வழங்க முடியும் என்பதால், இந்த அறுவரின் சார்பிலும் தனித்தனியாக மேன்முறையீட்டு நீதிமன்றில் பிணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இம் மனுக்களில் எதிர்வாதிகளாக குறிப்பிடப்பட்டிருக்கும் திருகோணமலை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சார்பில் சட்டமா அதிபர் தரப்பில் வழக்கின் கடந்த தவணையின்போது மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகியிருந்த அரச சட்டவாதி அனுபா டி சில்வா சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குவதை ஆட்சேபிக்கும் சாத்தியக் கூறுகளை மன்றில் சமர்ப்பித்திருந்தார். நாளைமறுதினம் மனுக்கள் மீதான விவாதத்தையடுத்து தீர்ப்பு வழங்கப்படவுள்ளது. பிணை மனுக்களை சட்டத்தரணி ஜெயதேவி இராயப்பு ஊடாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தம்மால் விடுதலை செய்யப்பட்ட பொலீஸ் கான்ஸ்டபிள், இராணுவச் சிப்பாய் ஆகியோருக்குப் பதிலாக அரசும் நல்லெண்ண நடவடிக்கையாக மேற்படி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் அறுவரையும் விடுதலை செய்யவேண்டும் என்று விடுதலைப் புலிகள் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# நிரந்தரத்தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்றும் தமிழ்ச்செல்வன் கோரினார். கிளிநொச்சி மக்களுக்கு அவசர தேவையான ஆஸ்பத்திரி ஒன்றை அமைக்க உதவியமைக்காக தமிழ்ச்செல்வன் நன்றி தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த 40 கோடி அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளோம். நிரந்தர சமாதானம் ஏற்பட்ட பின்னர் கூடுதல் நிதியை வழங்குவோம் என்று சினோ பதிலளித்தார் எனக் கூறப்பட்டது. நிரந்த சமாதானம் ஏற்பட தங்கள் பங்களிப்பையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

அதன் பின்னர் கிளிநொச்சியில் 60 கோடி ரூபா செலவில் அமையவிருக்கும் புதிய நவீன வைத்தியசாலைக்கான அடிக்கல்லை அவர் நாட்டினார். மாகாண, மத்திய அரசு உயர் அதிகாரிகள் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

இதையடுத்து வடக்கின் ஐந்து மாவட்ட அரச அதிபர்களையும் சந்தித்த அவர் அந்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வுப் பணிகளைக் கேட்டறிந்தார்.தொடர்ந்து ஆனையிறவுப் பகுதியில் கண்ணிவெடி புதைக்கப்பட்டுக் கிடக்கும் வயல்களைப் பார்வையிட்டபின் அவரும் அவரது குழுவினரும் மாலையில் கொழும்பு திரும்பினர்.

(ஒ-3-8)

# முஸ்லிம்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் நேற்று முற்பகல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் சந்தித்து இக்கோரிக்கை குறித்து பேச்சுநடத்தியது. இது தொடர்பாக பிரதமருடன் ஒன்றியம் நடத்திய இரண்டாவது சந்திப்பு இதுவாகும்.

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்ற அரசு வழி செய்யவேண்டுமென்ற கோரிக்கையை ஒன்றியம் நேற்று மீண்டும் பிரதமரிடம் வலியுறுத்தியது.

இக் கோரிக்கையை பிரதமர் ரணில் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டார் என்று இச்சந்திப்பில் கலந்துகொண்ட எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார். கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் ஜப்பானில் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகும் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்ற வாய்ப்பு ஏற்படாது எனவும் அவர் சொன்னார்.

பிரதமருடனான இச் சந்திப்புக் குறித்து வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற கட்டடத்தில் கூடி ஆராய விருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒன்றியத்தின் சார்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், தேசிய ஐக்கிய முன்னணி தலைவியான பேரியல் அஷ்ரப், எம்.பிக்களான டாக்டர் ஹுஸ்ரத், எம்.எஸ். தௌபீக், எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

பிரதமருடன் அமைச்சர் மிலிந்த மொறகொடவும் பேச்சுக்களில் பங்கு பற்றினார்.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தனித்தரப்புக் கோரிக்கையை கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட பிரதமர் ரணில், அக் கோரிக்கை தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் கலந்து பேசி இணக்கம்காண முற்படுவதாகத் தெரிவித்திருக்கிறார் என அறியப்படுகிறது.

தனித்தரப்பாக முஸ்லிம்கள் பேச்சுக்களில் பங்குபற்ற வழிசெய்யப்பட வேண்டுமென முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றியம் இலங்கைக்கான நோர்வே தூதுவரையும் சந்தித்து கோரிக்கை விடுத்திருக்கின்றது.

(ஐ)

## கண்ணீர் அஞ்சலி

கடைாவில் வசிக்கும் எனது அன்பு நண்பன் *மூர்த்தி* அவர்களினதும் கொழும்பில் வசிக்கும் சண்முகசுந்தரம் (குழந்தை) அவர்களினதும் அன்புத் தந்தையாகிய

**சின்னத்துரை செல்வராசா**

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகிறேன்.

*லக்ஷ்மி தொலைத்தொடர்பகம்,*
*சந்நிதி வீதி,*
*அச்சுவேலி.*

பிரிவால் துயருறும்:
தங்கவேல் குடும்பத்தினர்
(செக்கர்)
T.P. 070212233
212581
0777 - 575653

(15364)

## மரண அறிவித்தல்

### திருமதி ரெபேக்கா தியோகுப்பிள்ளை

*(இராசம்மா)*

06.03.2003 வியாழக்கிழமை காலமான திருமதி ரெபேக்கா தியோகுப்பிள்ளை (இராசம்மா) அவர்களின் நல்லடக்கம் இன்று (08.03.2003) சனிக்கிழமை காலை 10 மணிக்கு இல.42, கோவில் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு யாழ்.புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சவரிமுத்து நீக்கிலஸ்
(முன்னாள் புனித பேதுருபாவிலு தேவாலய நிர்வாக உறுப்பினர்),
பீற்றர் இம்மனுவல்,
அன்றன் அருள்நாயகம்.

*42, கோவில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(15368)

## கருத்தரங்கும் கலை நிகழ்வுகளும்

"கவசம்" அமைப்பினர் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தும் கருத்தரங்கும், கலை நிகழ்வுகளும்.

இடம் : யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்.
காலம் : இன்று (08.03.2003) காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 1.00 மணிவரை.

கருத்துரை வழங்குவோர் : திரு. என்.கனகரட்ணம், திருமதி ரெஜீனா இருதயநாதன், பேராசிரியர் தயா சோமசுந்தரம், திருமதி கனகாம்பிகை சிவராஜா, திரு.சந்திரசேகரசர்மா, திருமதி கிருபாதேவி பத்மா தனேஸ்வரன்.

கலை நிகழ்வுகள்:
- நிருத்தியாஞ்சலி
- விடியல் (நாட்டிய நாடகம்)
- பட்டிமன்றம் எமது சமுதாயத்தில் பெண்ணியம் **பேசப்படவேண்டுமா?**
  ஆம் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
  இல்லை - யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

(15367) திருமதி சுபானுதா தவநாயகம், *இணைப்பாளர்.*


**ராஜா** யாழ்ப்பாணம்
அஜித், சிம்ரன் நடித்த
**இவள் வருவாளா** (கலர்)
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(C/26847)

**நிறைஞ்சனாஸ்**
இன்று முதல்
விஜயகாந்த், அருண்பாண்டியன், மீனா நடித்த
**தேவன்** (கலர்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.45 (பு.நே.)
"U-571"
(C-26836)

**லஷ்மி** இணுவில்
இளைய தளபதி விஜய், ரீமாசென் நடித்த
**பகவதி**
தினசரி மூன்று காட்சிகள்
11.00, 3.00, 7.00 (பு.நேரம்)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று முதல்
ஸ்ரீகாந்த், ஸ்நேகா நடித்த
**ஏப்ரல் மாதத்தில்** (கலர்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)
திங்கள், செவ்வாய், புதன், வியாழன்
நான்களில் 7.00 மணிக்கு
ஆங்கிலத் திரைப்படம்
நாளை முதல்
(15352)

**விலாசம் மாற்றம்**

68-70, MANIPAY ROAD, JAFFNA. DIAL: 2430

வாடிக்கையாளர்கள் வசதியை முன்னிட்டு எமது ஸ்தாபனம் மூட்டாஸ் கடை. சந்திக்கு அண்மையில் வியாபாரச்சேவையை ஆரம்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

**ஹட்ஸன்ஸ்**

68-70 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 — 222 2430

தரமான மரம் - உருக்கு தளபாடங்கள், கணனி மேசைகள் - கணனி கதிரைகள்,
ஆர்ப்பிக்கோ மெத்தை விநியோகஸ்தர்கள் "சியஸ்டா" மெத்தைகள் [கூட்டுறவு உற்பத்தி - Co-op] — ரெக்சின் - Rexine வகைகள் யாவும் கிடைக்கும் இடம்.
(15361)

## தொண்டர் ஆசிரியர் போராட்டம் தொடர்கிறது

திருகோணமலை,மார்ச்8

திருகோணமலையில் மாகாணக் கல்வி அமைச்சின் முன்னால் நடைபெற்றுவரும் தொண்டர் ஆசிரியர்களின் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது. கடந்த 3ஆம் திகதி முதல் சத்தியாக்கிரகப்போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தொண்டர் ஆசிரியர்கள் கடந்த 6ஆம் திகதி முதல் சுழற்சிமுறை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

## கென்யாவுடனான ஆட்டத்தில் இந்தியா 6விக்கெட் வெற்றி

செஞ்சூரியன்,மார்ச்8

கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியில் நேற்று நடைபெற்ற கென்யாவுக்கு எதிரான சுப்பர்சிக்ஸ் ஆட்டத்தில் இந்தியா ஆறு விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கென்ய அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்பிற்கு 225 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக கே.ஒடுயா 79 ஓட்டங்களையும், ரவிந்துஷா 34 ஓட்டங்களையும் உடும்பே ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இந்திய அணியின் ஹர்பஜன்சிங், ஸ்ரீநாத் ஆகியோர்தலா இருவிக்கெட்டுக்களையும், மொங்கியா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களம் இறங்கிய இந்திய அணி 47.5 ஓவர்களில் 226 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி மற்றும் யுவராஜ்சிங் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 107, 58 ஓட்டங்களையும் ராகுல் ராவிட் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் உடும்பே 2 விக்கெட்டுக்களையும், சுஜி, ஒடுயா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சௌரவ் கங்குலி தெரிவுசெய்யப்பட்டார். (ஒ-5)

## சனத் ஜயசூரியாவுக்கு காயம்!

இலங்கைக் கிரிக்கெட் அணித் தலைவர் சனத்ஜயசூரியவின் கையில் காயமேற்பட்டது. எனினும் உலகக் கிண்ணத் தொடரின் எஞ்சியுள்ள போட்டிகளில் அவர் பங்குபற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற சுப்பர் சிக்ஸ் போட்டியில் ஆஸி. வீரர் பிரெட்லீ, 150 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய பந்து ஜயசூரியவின் கையைத் தாக்கியது. இதனால், அவர் உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ஜயசூரியவின் முன்னங்கையில் முறிவு ஏற்பட்டிருக்கலாம் எனவும், அதனால் அவர் உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து விலக நேரிடலாம் எனவும் முதலில் அறிவிக்கப்பட்டது.

எனினும், எக்ஸ்ரே பரிசோதனையின் போது, பந்து வேகமாகத் தாக்கியதால் அவரது முன்னங்கை நசுக்கப்பட்டுள்ளதே தவிர, முறிவு ஏற்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. இதனால், இலங்கை அணியின் ஏனைய போட்டிகளில் ஜயசூரிய பங்குபற்றுவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. (ஒ-5)

## தமிழ்க் கைதி ஒருவரின் பரிதாபகரமான நிலைமை

கொழும்பு,மார்ச்8

களுத்துறைச் சிறைச்சாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டிருந்த மன்னார் ஆயரிடம் உண்ணாவிரதத்தில் ஈடுபடும் தமிழ்க் கைதிகள் தமது துயரநிலைமையை விளக்கியுள்ளனர்.

அவர்களில் ஒருவர் மன்னார் ஆயரிடம் தெரிவித்ததாவது:-

1996 ஆம் ஆண்டு சந்தேகத்தின் பேரில் நான் கைது செய்யப்பட்டேன். அன்றிலிருந்து இதுவரை 98 தடவைகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். எனது வழக்கை இதுவரை 14 சட்டத்தரணிகள் கையாண்டுவிட்டனர். 4 நீதிபதிகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

நான் சிறையில் வாடும் இந்நாள்களுக்குள் எனது தாயும் ஒரு மகனும் விபத்தில் உயிரிழந்தனர். மற்றொரு பிள்ளையும் வேறொரு சந்தர்ப்பத்தில் இறந்துவிட்டது. எனது குடும்பம் ஆதரவற்று நிற்கின்றது.

- இவ்வாறு அவர் கண்ணீர் மல்க மன்னார் ஆயரிடம் கூறியுள்ளார். (ஒ-9)

## பேர்னாட் அளித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுத்துறை சிறைக்கு விஜயம்செய்த மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் கருத்துத் தெரிவிக்கையில் :-

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாக கைதிகள் தெரிவித்தனர். அவர்களுடைய இந்தத் தீர்மானத்தை நான் மதிக்கின்றேன். இது அவர்களுடைய சொந்தத் தீர்மானம். வெகுவிரைவாக அவர்களுடைய கோரிக்கைகளுக்கு அரசின் சமாதான செயலகம் விடையைக்கொடுக்கும் போது கைதிகள் தமது போராட்டத்தை கைவிடுவர் - என்றார் ஆயர்.

அரசின் சமாதான செயலகப்பணிப்பாளர் பேர்னாட் குணதிலக்க கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

கைதிகளுக்கு பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. நாம் இது தொடர்பாக பேச்சுகள் நடத்தினோம் அவர்களின் வழக்குகள் தாமதமாக நடைபெறுவதை நிறுத்தி, வெலிக்கடையில் அமைக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றின் ஊடாக வழக்கு விசாரணைகளை துரிதமாக நடத்துவது, பிணை மறுக்கப்பட்ட கைதிகளை பிணையில் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது, வடக்கு - கிழக்கு பகுதிகளை சேர்ந்த கைதிகளின் வழக்குகளை அவர்களது சொந்த இடங்களில் உள்ள நீதிமன்றங்களுக்கு இடம் மாற்றுவது போன்ற விடயங்கள் தொடர்பாக கைதிகளுடன் பேச்சுக்கள் நடத்தினேன்.

சாதகமான முடிவு ஒன்றை பெற்றுத்தரலாம் என்று நான் கைதிகளுக்கு கூறினேன். எனினும் அவர்கள் உண்ணாவிரதத்தை கைவிடச்சம்மதிக்கவில்லை.

தமது பிரச்சினைகள் தொடர்பாக சாதகமான தீர்வு எட்டப்படும் வரை உண்ணாவிரதத்தை தொடரப் போவதாக கைதிகள் கூறியுள்ளனர். - என்றார் பேர்னாட் குணத்திலக்க. (ஒ-9-12)

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பியுடன் பேச்சுகளில் 90 சதவீத இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. இணக்கப்பாடு காணப்படாத விடயங்கள் தொடர்பாக தெரிவிப்பது உகந்ததல்ல.

ஜே.வி.பி. - பொ.ஐ.மு. கூட்டு, அரசைப் பயம் கொள்ளச் செய்துள்ளது. இதனால் ஊடகங்களின் ஊடாக எமது கூட்டுத் தொடர்பாக பிழையான பிரசாரங்களை அரசு மேற்கொள்ளுகிறது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுகள் மூலம் தீர்வு என்ற எமது கட்சியின் நிலைப்பாட்டை திரிவுபடுத்திக் காட்டுவதும், எமக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டுக்கு எமது கட்சிக்குள்ளேயே பலத்த எதிர்ப்பு எனவும் ஊடகங்களின் ஊடாக பிரசாரப்படுத்தி எமது கூட்டமைப்பைத் தடுக்க ஐதேக. அரசு முயற்சிக்கிறது.

தேர்தல் ஒன்றுக்காக கூட்டுச் சேராமல் வேறு எதற்கு கூட்டுச் சேரவேண்டும்? கடந்த தேர்தலின் போது ஜே.வி.பியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தால் நாம் 117 ஆசனங்களைப் பெற்றிருக்க முடியும். அதன் மூலம் நாம் ஆட்சி அமைத்திருக்கலாம். பேச்சுக்கள் நடைபெறும் போது சில முரண்பாடுகள், சில விட்டுக்கொடுப்புக்கள் இருக்கத்தான் செய்யும். இம்மாத இறுதிக்குள் ஜே.வி.பிக்கும் எமக்கும் இடையிலான அனைத்து முரண்பாடுகளும் களையப்பட்டு முழுஇணக்கப்பாடு காணப் படும். - என்றார் அவர்.

## படையினருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான விசேட அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் சித்தசுவாதீனம் அற்றவரிடம் இருந்து ஒருவாறு மீட்கப்பட்டு உடனடியாக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

பின்னர் பொலீஸார் அந்த இடத்துக்கு வந்து சித்தசுவாதீனமற்ற அந்த நபரை மடக்கிப் பிடித்து அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றிச்சென்றனர். (ஒ)

## World Cup Score card - 2003



ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல. 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி : ஆஸ்திரேலியா

ஆட்டநாயகன் : ரிக்கி பொன்ரிங்

முடிவு : 96 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வெற்றி

### ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| ஏ. கில்கிறிஸ்ட் | run out(வாஸ்) | | .... 99 | 88 | 14 | 2 |
| எம்.ஹைடன் | c/திலகரட்ன | b/முரளி | 22 | 34 | 4 | 0 |
| ஆர்.பொன்டிங் | c/சங்கக்கார | b/தில்கார | ....114 | 109 | 8 | 4 |
| டி.மார்டின் | | b/தில்கார | 52 | 58 | 1 | 0 |
| டி.லெமன் | c/டி சில்வா | b/தில்கார | .... 10 | 10 | 1 | 0 |
| ஐ.ஹார்வி | not out | | .... 05 | 03 | 1 | 0 |
| எம்.பெவன் | not out | | .... 01 | 01 | 0 | 0 |
| உதிரிகள் | | | .... 16 | | | |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | | ....319/5 | | | |

களமிறங்காதவர்கள் : ஏ.பிக்ஸல், ஜீ.மெக்ராத், பி.லீ, பி.ஹொக்

வாஸ் : 8-0-59-0, குணவர்த்தன : 6-0-46-0, டி சில்வா : 5-0-36-0, முரளிதரன் : 10-0-47-1. ஆர்னல்ட் : 2-0-21-0, தில்கார : 9-0-47-3, ஜயசூரிய : 10-0-59-0.

### இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு | | ஓட்டம் | பந்து | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| எம்.அத்தபத்து | c&b லீ | | ....16 | 24 | 3 | 0 |
| ஸ.ஜயசூரிய | retired hurt | | ....01 | 05 | 0 | 0 |
| எச்.திலஹரட்ண | | b/மெக்ராத் | ....21 | 41 | 3 | 0 |
| எம்.ஜயவர்த்தன | c/கில்கிறிஸ்ட் | b/லீ | ....00 | 03 | 0 | 0 |
| டி. சில்வா | c&b ஹொக் | | ....92 | 94 | 9 | 4 |
| ஆர்.ஆர்னல்ட் | lbw | b/லீ | ....01 | 06 | 0 | 0 |
| கே.சங்கக்கார | run out(ஹொக்) | | ....20 | 38 | 2 | 0 |
| ஸ்.வாஸ் | lbw | b/ஹொக் | ....21 | 45 | 2 | 0 |
| எம்.முரளிதரன் | c/லீ | b/லெமன் | ....04 | 05 | 0 | 0 |
| டி.பெர்னாண்டோ | lbw | b/மெக்ராத் | ....09 | 13 | 2 | 0 |
| பி.குணரட்ண | not out | | ....15 | 15 | 3 | 0 |
| உதிரிகள் | | | ....23 | | | |
| மொத்தம் | (47.4 ஓவர்கள்) | | ....223/9 | | | |

மெக்ராத் : 9.4-1-25-2, லீ : 10-1-52-3, ஹார்வி : 7-0-29-0, பிக்ஸல் : 7-1-32-0, ஹொக் : 9-1-45-1, லெமன் : 5-0-26-1.


### தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல்யமான எலக்ரோனிக் நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

காசாளர் (பெண்)
வரவேற்பாளர் (பெண்)

சுயவிவரங்களுடன் உடன் தொடர்புகொள்ளவும்.

ஸ்கை எலக்ரோனிக் சிஸ்டம் (SKY)
1C, ஸ்ரான்லி வீதி
(வின்சர் தியேட்டர் சந்தி),
யாழ்ப்பாணம். (15340)



### புலமைப்பரிசில் திட்டம்

IBMS

எமது புலமைப்பரிசில் திட்டப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்து இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் 08-03-2003 அன்று எமது நிறுவனத்திற்கு வந்து அனுமதி அட்டைகளை பெற்றுகொள்ளவும்.

விண்ணப்பிக்கத் தவறியவர்கள் 08-3-03 முன்பதாக உங்கள் விண்ணப்பங்களை நிறுவனத்தில் நேரடியாக சமர்ப்பிக்கவும்.

701, K.k.s Road, Jaffna | Chankaththanai, Chavakachcheri | N.M.M.V Road, Nelliyadi



சந்நதி முருகன் வேக்ஷொப் அன் சேர்விஸ்
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டெட்டின்
அதிகாரம் பெற்ற சேவை நிறுவனம்

☆ மோட்டார் சைக்கிள்
☆ ஓட்டோ என்பவற்றுக்கு சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.
கட்டணம்:- மோட்டார் சைக்கிள் ரூபா 200
ஓட்டோ ரூபா 400
☆ திருத்த வேலைகளும் செய்து கொள்ளலாம்.

இல.241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 5202 (15285)



இந்தியா போட்டா ஆச்சிரம இறை தியானக் குழுவினரால் நடத்தப்படும்



# இறை தியான குணமாக்கல் வழிபாடுகள்



மார்ச் 19, 20, 21 ஆம் திகதிகளில்

யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலய முன்றிலில்

நிதமும் மாலை 3.30 முதல் 7 மணி வரை.

இவ்வழிபாடுகளில் பங்குபற்றுவோர் மூன்று தினங்களும் தொடர்ச்சியாகப் பங்குபற்றுவது மிகுந்த பலனைக்கொடுக்கும்.

பாவ வாழ்விலிருந்து விடுதலைபெற, கவலைகள், கஷ்டங்கள் நீங்கி அமைதிபெற, நோய்கள் நீங்க, உலக அமைதி பிறக்க நம்பிக்கையோடு வாருங்கள்.

(இறுதி பேருந்தில் வீடு திரும்பலாம். மூன்று நாள்களுக்கும் தங்கியிருக்க விரும்புவோருக்கு தங்கிட வசதிகள் உண்டு).

இறைதியான குழுவினர். (15290) - ஆயர் இல்லம்.



LIONAIR

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்

பாதுகாப்பான ~ சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992

(C/26688)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.